போன் நெ. 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 7—3—54 | இதழ் 36

அந்த 'மரம்' வளரும் விதம்!

[அடிகள்]

புளுகுவதற்குக்கூடத் திறமை வேண்டும் போலும்! சிலர் புளுகுகிறார்கள் — உடனே அது புளுகு தான் என்று தெரிந்து விடுகிறது. வேறுசிலரும் புளுகுகிறார்கள்—அது இரண்டொரு நாட்களில் தெரிந்து விடுகிறது. இன்னும் சிலர் புளுகுகிறார்கள் — அது உண்மையாக இருக்குமென்ற நம்பிக்கையைச் சிலருக்கு உண்டாக்கிவிடுகிறது. அந்த நம்பிக்கையை அஸ்திவாரமாகவைத்துக்கொண்டு, அவன் தன்னுடைய புளுகை மேலும் நிலைபெறச்செய்யும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கி விடுகிறான். அவனுடைய புளுகை உண்மையென்று நம்பியவர்களுக்கு அவனுடைய முயற்சியைக் காணக்காண அந்த நம்பிக்கை வளர்ந்துகொண்டே போகிறது. பிறகு அந்த நம்பிக்கை நன்றாக வேரூன்றி நிலைத்துவிடும் என்ற ஆசை புளுகியவனைப் புளிகாங்கிதம் அடையச் செய்துவிடுகிறது. அந்தப் புளுகை மக்கள் நம்பியிருக்கும் வரையில், புளுகினவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் நல்ல வேட்டைதான். அந்தப் புளுகால் தங்களுடைய வாழ்க்கை வளமாக நடக்கிறதென்பதை அறிந்ததும், அதனைக் கடைசிவரை காப்பாற்றியாக வேண்டுமென்று அவனும் அவனைச் சார்ந்தோரும் அல்லும் பகலும் அதே வேலையாக இருந்து அதற்கு வேண்டிய பக்கபலங்களைத் தயாரிக்க முற்பட்டுவிடுகின்றனர்.

திடீரென்று, ஒரு நாள், எங்கு பார்த்தாலும், யாரைப்பார்த்தாலும் அதைப்பற்றியே பேசிக்கொள்கிறார்கள். என்னவென்று விசாரித்ததில், சிலகாலமாகப் பலரால் உண்மையென நம்பப்பட்டுவந்த ஒன்று வெறும் புளுகென்று தெரிந்துவிடுகிறது. உடனே அவன் தன்னுடைய கடையைக் கட்டிக்கொண்டு போய்விடுகிறான். அவனுடைய புளுகும் திறமை அந்த அளவோடு முடிந்துவிடுகிறது. "செட்டிக்காரன் புளுகு எட்டு நாட்களுக்குள் தெரிந்துவிடும்" என்ற பழமொழி நம் நாட்டில் வழங்கப்படுவதற்குரிய காரணத்தையும் நோக்கத்தையும் கவனிக்கும்போது, இந்தப் புளுகு வியாபாரம் நீண்டகாலமாகவே இங்கு நடைபெற்று வருகிறதென்பது நன்கு தெரிகிறது.

புளுகுவதிலும் பல ரகங்கள் உண்டென்பதும் இந்தப் பழமொழியால் நன்கு புலனாகின்றது. சாதாரண புளுகு! திடீர்ப் புளுகு! அண்டப் புளுகு! ஆகாயப் புளுகு! இவற்றிற்கும் மேலாக ஒரு புளுகு இருக்கிறது. அது, சாதாரண— திடீர்ப்புளுகுகளின் வரிசையில் வரக்கூடியதல்ல.

வயிற்றுப் பிழைப்புப் புளுகு என்பது அதன் பெயர். இந்தப்புளுகு நாம் மேலே குறிப்பிட்ட பழமொழிக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கட்டுப்பட்டதோ அடங்கிப்போகக் கூடியதோ அல்ல. இதனை நிரந்தரமான புளுகு என்று கூடச் சொல்லலாம். புளுகில் நிரந்தரமான புளுகு என்பதாக ஒன்றிருக்க முடியுமா என்று சிலர் கேட்கலாம். கேள்வி என்னவோ நியாயமானதுதான். புளுகென்றால், புனைந்துரைத்தல், என்று பொருள். அதாவது இல்லாததை இட்டுக்கட்டிக் கூறுவதற்குப் புளுகென்று பெயர். எனவே இல்லாதது நிரந்தரமாக எப்படி இருக்கமுடியுமென்ற கேள்வியைத் தவறென்று யார்தான் கூறமுடியும்? என்றபோதிலும் நிரந்தரப் புளுகு என்பதாக, அன்றுமுதல், அதாவது அது புளுகப்பட்ட காலம்முதல் இன்றுவரை இருந்துகொண்டுதான் வருகிறது. அவ்வப்போது ஏற்படும் அறிவுப் புயலால் அதனை அசைக்க முடிவதில்லை; ஒவ்வோர் சமயங்களில் ஒரிரு கிளைகளை ஒடித்தெறிய முடிகிறதேயொழிய, மரத்தை வேரோடு பெயர்த்தெறிய முடிவதில்லை. நிரந்தரப் புளுகு என்ற நச்சமரத்தின் கிளைகளை ஒடித்த—ஒடிக்க முயன்ற முற்போக்கு அறிவியல் வாதிகள்

கிள்ளுக் கீரையாக மதிக்கப்பட்டு அவ்வப்போது கிள்ளி எறியப்பட்டிருக்கின்றனர் என்பது சரித்திரம் கண்ட உண்மைகளில் ஒன்று.

இந்தப் புளுகு மரம் இருக்கிறதே, அது வளர்க்கப்படும் விதம் தான் வேடிக்கையானதாகும். மரத்தை யார் வைத்தார்களோ அவர்கள்தான் அதற்கு உரமிட்டு நீர் பாய்ச்சி வளர்ப்பது வழக்கம். ஆனால் இந்த மரம் அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல. இதனை நட்டவன் ஒருவன் — வளர்ப்பவன் வேறொருவன். மரத்தை உண்டாக்கியவன், அது வளர்வதற்கான வழி வகைகளைச் செய்துவிட்டு, அதன் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அதாவது, அந்த மரத்தை வளர்ப்பதற்கு ஆட்களை நியமித்துவிட்டு விலகிவிடுகிறான்—ஒவ்வோர் சமயம் தனக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று கூடச் சொல்ல அவன் பின்வாங்குவதில்லை. என்றபோதிலும் அந்த மரத்தின் பயன் முழுவதையும் அனுபவிப்பது மட்டும் என்னவோ அவன்தான்! அந்த மரத்தில் பூக்கும் ஒருபூவைக் கூட அதனை வளர்ப்பவர்கள் தொட மாட்டார்கள். பூவுக்குப் போவானேன்! அந்த மரத்திலிருந்து உதிர்ந்த சருகைக்கூட அவர்கள் தீண்டமாட்டார்கள். என்றால், மரத்துக்குடையவன் மகா பலசாலி என்பதா அதன் பொருள்? இல்லை, இல்லை! மரத்துக்குடையவனால், மரத்தை வளர்ப்பவன் பக்கத்தில்கூட நிற்கமுடியாது. இவன் மூச்சுவிட்டாலே அவன் நெடுமரம்போல் சாய்ந்துவிடுவான். இவன் உடல் உழைப்பால் உரம் பெற்றிருப்பவன். அவன் ஊர்ச்சொத்தைத் தின்று உல்லாசமாகத் திரிவதால் பலமிழந்திருப்பவன். என்றபோதிலும், அந்த மரத்தை வளர்ப்பவன், அதன் பயனை அனுபவிப்பதில்லை — அனுபவிக்க அனுமதிக்கப்படுவதில்லை. தோட்டத்தின் கதவு என்னவோ எப்பொழுதும் திறந்தபடிதான் இருக்கிறது. மரத்தை வளர்ப்பவன் உள்ளே போகிறான் — நீர் பாய்ச்சுகிறான், களை எடுக்கிறான்—கஞ்சிக் கலயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியேவந்துவிடுகிறான். அப்பொழுதும் அந்தக் கதவு பூட்டப்படுவதில்லை. அந்த வழியே பலர் போகிறார்கள், வருகிறார்கள். மரத்தில் பூவும், பிஞ்சும், காயும், பழமும் இருப்பதைப்பார்க்கிறார்கள். ஆனால் அதற்குள் நுழையமாட்டார்கள். பூவைப் பறிக்கலாம், பழத்தை எடுக்கலாம் என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்படாது. என்றால், தோட்டத்துக்குச் சொந்தக்காரனுடைய வீடு எதிரே இருக்கிறது, எனவே, பார்த்துவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தாலா அவர்கள் அதற்குள் நுழையாமல் போகிறார்கள்? இல்லை, இல்லை! தோட்டத்துக்குடையவன் எங்கோ தொலைவில் துரைத்தனம் நடத்திக்கொண்டிருப்பான் — வேலியும் காவலும் இல்லாமல் மரம் இங்கே வளரும். பூக்கும், காய்க்கும், பழுக்கும் — பலன அவனுக்குப் போய்ச்சேர்ந்துவிடும். பழமாகப்போகும், அல்லது பணமாகப் போகும்.

அந்தக் காலத்திலே புலியும் பசுவும் ஒரு துறையில் தண்ணீர் குடித்ததாமே! புலி பசுவைக் கொல்ல நினைத்தால், உடனே, ஆண்டவன் கையில் அசைந்து கொண்டிருக்கும் சக்கரம் ஆகாயமார்க்கமாக வந்து புலியின் தலையைக் கரகரவென்று அறுத்துக்கடலில் போட்டுவிட்டுப் போய்விடுமாம்! அக்ரமம், அநீதி எதுவும் நடக்காதாம்! ஆண்டவன் கட்டளை அப்படி இருந்ததாம்!

இந்தக் காலத்தில்......!!! இந்தப் பகுதி தான் ஆச்சரியமாகும். ஆண்டவன் கையில இருக்கும் அந்தச் சக்கரம் இந்தக் காலத்தில் அந்த வேலையைச் செய்ய மறுக்கிறது அலலது ஆண்டவனே அந்த வேலையைச் செய்ய விரும்பவில்லை என்று பொருள்?

"அந்தக் காலத்தில் ஆண்டவனே நேரடியாகத் தாமே தலையிட்டுச் செய்த பல காரியங்கள் இன்று அவருடைய பக்தகோடிகளால் செய்யப்பட்டு வருகின்றன. எனவே ஆண்டவன் அந்தக்காலத்தில் செய்த கடுமையான உழைப்புக்குச் சிரமபரிகாரம் எடுக்கும் முறையில் ஓய்வாக இருக்கிறார் என்று பொருள்!

இந்த அரும் பெரும் இரகசியத்தை அறிய முடியாத சிலர், ஆண்டவனையே இல்லையென்று கூறுமளவுக்குத் தைரியம் பெற்றிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நிரீசுரவாதிகளுக்குச் சரியான பாடம் கற்பிக்கும் முறையில் தான் அந்தத் தோட்டம் அமைந்து இருக்கிறதென்பதைப் பாவம் அவர்களால் எப்படி அறிந்து கொள்ள முடியும்" என்று அந்த மரத்துக்குடையவன் அவ்வப்போது கூறிப் பெருமிதம் கொள்வதையும் நாம் பார்க்கிறோம். என்ற போதிலும், மரத்தை "நாம்" தான் வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

*

கம்பனைக்காண வடமொழி கற்றாக வேண்டுமென்ற கன விருப்பத்தோடிருக்கும் சேதுப்பிள்ளைகளில் இருந்து, தமிழில் மந்திரம் சொன்னால் அண்ணாத்துரை கூடக் கோயிலுக்கு வருவார் என்ற ஆசையோடு இருக்கும் குன்றக்குடிகள்வரை எல்லோரும் அந்த மரத்தின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள்.

எனவே மரத்துக்குடையவன் மமதையோடு பவனி வருகிறான். என்னைப்பார்! என் மரத்தைப்பார்!! அது வளரும் விதத்தை அறிந்தாயா என்ற அகம்பாவத்தோடு அரசோச்சுகிறான்,

மரத்தை வளர்க்கிறோம் — அது நமக்குப் பயன்படவில்லை—என்பதறிந்தும் வளர்க்கிறோம் — அதன் வளர்ச்சியில் அதிககவனம்செலுத்துகிறோம்.

வயலில் வேலைசெய்பவன் பயிரை வளர்த்து அதன் பயனைப் பண்ணையாருக்கு அனுப்பிவிட்டுப், பாதி வயிற்றுக்குக் கூடப் பழங்கஞ்சி கிடைக்கவில்லையே என்ற பரிதாபமான நிலையிலுங்கூடப் பண்ணையாரின் பக்குவம் அறிந்து நடந்து கொள்வதுதான் சரி — முறை என்றெண்ணி ஏமாந்து போகிறான்.

இதைவிட, இந்த மரத்தைவளர்ப்பவர்களின் நிலை இருக்கிறதே மிக மிக மோசமானதாகும்,

அந்த ஏழை விவசாயியின் ஏக்கம் என்றைக்காவது ஒரு நாள் தீரும் அல்லது தீர்க்கப்படும் நிலை உண்டாகும்.

காலமாறுதல், அந்தக் காரியத்தைக் கட்டாயம் செய்துதான்தீரும்.

ஆனல், இந்தப் புளுகு மரத்தை வளர்க்கும் 'புண்யவாள்களின்' நிலை இருக்கிறதே! இதனை எந்தக் கால மாறுதலும் மாற்றிவிடாது போலன்றோ தெரிகிறது!

காலமாறுதலின் கனவேகம் இந்த உலகின் பலபாகங்களைத் தலைகீழாக அதாவது பழைய முறையிலிருந்து புதிய முறைக்கு மாற்றியிருக்கிறதென்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ரஷ்யாவைப்பார்! சைனாவைப் பார்! என்று சுட்டிக்காட்டத் தேவையில்லாத அளவுக்கு அற்புதமான மாறுதல்கள் நடைபெற்று வருவதை, இங்கு தவிர, எங்கும் காண முடிகிறது.

மற்றநாடுகளில் காலமாறுதலோடு கருத்து மாறுதலும் ஒத்துழைப்பதால் அங்கெல்லாம் அவை சுலபமாக முடிந்தன — முடிகின்றன.

ஆனல், இங்குள்ள நிலை அப்படியல்ல! இங்கு சிற்சில சமயங்களில் ஏதாவது காலமறுதல் ஏற்பட்டபோகினும், கருத்து மாற்றம் கடுகளவும் ஏற்படுவதில்லை. மற்ற நாடுகளில் காலமாற்றம் கருத்து மாற்றத்தை உண்டாக்கிவிடுகிறது. இங்கு, காலம் தானக மாறினலும், கருத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை— ஏற்படுத்தினலும் ஏற்றுக் கொள்ளுவதில்லை—ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டாலும். அதனைத் தூற்றுவோரின் துரிதமான முன்னேற்றத்தால் அந்தக்கருத்து மாறுதல் முறியடிக்கப்பட்டு விடுகிறது.

இது நமது நாட்டுக்கென்க் கிடைத்துள்ள அல்லது அமைந்துள்ள ஒருதனி "வாய்ப்போ" என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

புத்தர், கபிலர் காலத்திலிருந்து, இராமலிங்க அடிகள் காலம் வரை தோன்றிய எந்தக்கருத்துப்புரட்சிக்காரர்களாலும் இந்த மாறுதலைச் செய்ய முடியாமல் போய் விட்டதென்றால், இதன் அஸ்திவாரம்எந்த அளவு ஆழத்திலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இதோ பாருங்கள், அந்தமரத்துக்குச் சொந்தக்காரர்களில் ஒருவர், அதன் வளர்ச்சியில் எவ்வளவு அக்கரை கொண்டிருக்கிறார் என்பதனை!

"நான் பிராமணன். நீங்கள் ஷத்ரியர்கள். எனவே, நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்."

என்று கூறுவதன் வாயிலாக அவர் அந்த மரத்தை எவ்வளவு அருமையாக வளர்க்கிறார் என்பதைக்கவனியுங்கள்!

'நான் பிராமணன்!"

"நீங்கள் க்ஷத்ரியர்கள்!"

"இவர்கள் வைசியர்கள்!"

அதோ திரிகிறார்களே, குடிக்கக் கஞ்சியும் உடுக்கத்துணியும் இருக்க வீடும் இல்லாமல்!

"அவர்கள் சூத்ரர்கள்!"

இந்த ஏற்பாட்டை நாட்டில் நிலை பெறச் செய்வதில், நானும் எனது பரம்பரையினரும் அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை செய்துவரும் சேவைகளும், எடுத்துவரும் நடவடிக்கைகளும் இருக்கின்றனவே, அவை செப்புந்தரமன்று!

புத்தரின் புயலால்! கபிலரின் கசையடியால்! சிவவாக்கியாரின் சீற்றத்தால்! வள்ளுவரின்வாய்மையால்! இராமலிங்கனரின் இடித்துரையால்! இன்னும் இவர்கள் போன்ற எண்ணற்ற எழுச்சிக்காரர்களால்! அப்பப்ப!! நாம் பட்டபாடும், அடைந்த தொல்லையும் கொஞ்சநஞ்சமல்ல. அவ்வளவு ஆக்ரமிப்புக்களையும் சமாளித்து, இந்த ஏற்பாட்டை நாம் காத்துவருகிறோம் என்றால் அது சாமான்யமானதா?"

என்று கேட்பதுபோல் பேசியிருக்கிறார், அந்த மரத்தின் சொந்தக்காரர்களில் ஒருவர்.

கொரியப் போர் முனைக்குச் சென்று சமாதானப் பணியாற்றியதாகச் சொல்லப்படும் இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் 1-3-54-ல் சென்னை துறைமுகத்தில் வந்திறங்கிய போது, அவர்களை வரவேற்ற சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார்தான், நாம்மேலேகுறிப்பிட்டது போல் பேசியிருக்கிறார். இராணுவத்தினர் ஷத்ரியர்களாம்! அவர்களை வரவேற்ற ஆச்சாரியார் பிராமணனும்!

ஒரு பிராமணன், ஷத்திரியனையும் மற்ற வகுப்பினரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்ற சம்பிரதாயப்படி, அவர்களை வரவேற்பதாக வேறு பேசியிருக்கிறார்.

யார் இவ்விதம் பேசினர்கள் என்ற சந்தேகம் மீண்டும் யாருக்காவது தோன்றினல், இதோ, யார், 'எந்த நாட்டிலும் இல்லாத ஜாதிப் பாகுபாடுகள் இந்த நாட்டில் தான் அதிக அளவில் இருக்கின்றன— அவை ஒழிக்கப்படும் வரை சச்சரவுகளும் கிளர்ச்சிகளும் இருந்து கொண்டுதான் இருக்கும்" என்று சமயம் நேரும் போதெல்லாம் சண்டமாருதம் (வாயளவில்மட்டும்) கிளப்பி வருகிறாரோ, சாட்சாத் அவரேதான்—ஆச்சாரியரே தான் இந்த உபநிஷத்துக் கருத்தையும் உதிர்த்திருக்கிறார்.

யாருக்கு? ஷத்ரியர்களுக்கு! யார்? பிராமணோத்தமராம் ஆச்சாரியார்!

ஷத்ரியர்கள் — இவர்கள் நாட்டின் அரசுரிமையைப் பாதுகாப்பதில் மற்றவர்களைவிட அதிகப் பங்குகொண்டவர்கள் — கொள்ள வேண்டியவர்கள்.

பிராமணர்கள்—இவர்களுக்குரிய தொழில்கள் எவை? ஓதல் ஓதுவித்தல்—வேட்டல், வேட்பித்தல்— ஈதல், ஏற்றல் என்ற அறுவகைத் தொழில்களை இவர்களுக்கு ஆகமங் வகுத்துள்ளது.

மற்றும் வைசியர்கள்—சூத்ரர்கள் ஆகியோருக்கும் மனுவாதி ஆகமங்கள் மாற்றக்கூடாத சிலதிட்டங்களை ஏற்பாடுகளை வகுத்துள்ளன. அவை பற்றி எல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

கொரியா சென்று திரும்பிய படைவீரர்கள் ஆச்சாரியாரால் ஷத்திரியர்கள் என்று அழைக்கப்பட்டனர். நாம் வரவேற்கிறோம். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையால்" என்றவள்ளுவர்வாக்கைக்கூட ஒரு புறம் தற்காலீகமாகத் தள்ளி வைத்து விட்டு, ஆச்சாரியாரின் இந்தக் கூற்றை வாதத்துக்காகவாவது ஒப்புக்கொள்ளுகிறோம். கொரியாப் போர் முனைக்குச் சென்ற படைவீரர்களில்,

மற்றவர்களால் தீண்டப்படாதவர்கள் என்று கருதப்படுபவர்க

ளும், தங்களை மற்றவர்கள் தீண்டக்கூடாதென்று திமிராகக் கருதுபவர்களும், அதாவது பிராமணனில் இருந்து சண்டாளன் என்று கருதப்படுபவன் வரை எல்லோருமே இருந்திருப்பர்.
பட்டாளத்தில் இன்னார் சேரலாம், இன்னார் சேரக்கூடாதென்ற நிபந்தனை (உடல் கூற்று முறையைத் தவிர) கிடையாது. எனவே, பட்டாளத்தில்சேர்ந்தவர்கள் எவராயினும் சரி, அவர்கள் எல்லோரும் ஷத்ரியர்களாகி விடுகின்றனர் என்ற ஆச்சாரியாரின் வாதத்தை நாம் நிச்சயமாக ஒப்புக்கொள்கிறோம்.

அதே சமயத்தில்நாட்டை ஆளும் அரசுரிமையைப் பெற்றவர் எவராயினும், அவர், ஷத்ரியர் என்ற வகுப்புக்கு மாற்றப்படுகிறார் என்று நாம் கூறுவதையும் ஆச்சாரியார் போன்றார் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும். மறுத்தால் மதியுடையவர் அவர் என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

சேரியில் இருந்த சின்னான் பட்டாளத்துக்குப் போனவுடன் ஷத்ரியனாக ஆக்கப்படு விட்டான் என்ற அகமகிழும் செய்தியை வரவேற்றுப் பாராட்டும் நாம், அக்ரகாரத்தில் இருந்த ஆராவமுதய்யங்கார் கட்டிடஎன்ஜினீயராய் விட்டவுடன் கொத்தனாராக ஆக்கப்பட்டுவிட்டார் என்றகுதூகலச்செய்தியையும் வரவேற்றுப் பாராட்டத்தானே வேண்டும்,

அதே போல அந்தணராய் இருப்பவன் ஒருநாட்டின் அமைச்சனாக ஆனவுடன் அவன் தன்னுடைய அந்தணத்தன்மையை அதாவது பிராமண இயல்பை இழந்து விடுகிறான், என்று யார் சொன்னாலும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்! அதுதானே முறையும் நெறியும் பண்பும்.

அதைவிட்டு, பிராமணன் எங்கிருந்தாலும் எந்த வேலையைப் பார்த்தாலும் எந்த நிலைமையிலிருந்தாலும் அவன் பிராமணன் என்று அழைக்கப்படலாமா? அப்படி அழைப்பது ஆச்சாரியார் கூறும் இந்த வாதத்திற்கு ஒத்துவருகிறதா? ஆச்சாரியாரின் கூற்றுப்படி பட்டாளத்திலிருப்பவர்களெல்லாம் ஷத்திரியர்கள் என்றால், மற்றத் தொழில்களில் இருப்பவர்களும் அந்தந்தத் தொழிலுக்குரிய ஜாதியினராகத்தானே கருதமுடியும்—கருதவேண்டும். இதை ஒப்புக்கொள்ளும்போது ஆச்சாரியார் தம்முடைய பிராமணத் தன்மையை இழந்து ஷத்திரியர் என்ற படிக்கு இறங்கி வருகிறார் என்று ஆகிறது. காரணம் அவர் இப்பொழுது நாட்டை ஆளும் அரசு உரிமையை ஏற்று இருக்கிறார். எனவே அவர் ஒரு ஷத்திரியர் — பிராமணன் அல்ல! இவரே நாளையதினம் இந்த அமைச்சர் பதவியிலிருந்து விலகியோ-விலக்கப்பட்டோ, ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கிறார் என்றே வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது அவர் ஒரு வைசியராக ஆகிறார். அதிலும் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டு அந்த வியாபாரத்தைக் கைவிட்டுத் தமக்குத் தெரிந்த ஒரு கைத்தொழிலை (க்ஷவரத் தொழில் சலவைத் தொழில், செருப்புத் தைக்கும் தொழில், மண்பாண்டம் செய்யும் தொழில்—இவைகள் இவருக்கு பழக்கமான தொழில்கள்—அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்) செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவர் யார்? ஆகமவிதிப்படியும் ஆச்சாரியாரின் வாதப்படியும், அவர் ஒரு சூத்திரன் அல்லது சண்டாளனாக ஆகிறார். இதை அவர் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அவருடை வாதம் அவரை ஒப்புக்கொள்ளும்படி செய்துவிடுகிறது.

ஆச்சாரியாரின் வாதத்தை வைத்து இவ்வளவும் எழுத நேர்ந்தது. நாம் எழுதியவைகளை ஆச்சாரியாரே ஒப்புக்கொள்ளமாட்டார் என்பதும் நமக்குத் தெரியும். ஏனென்றால் கொரியப் போர்முனைக்குச் சென்று திரும்பிய படைவீரர்களைப் பார்த்து "நீங்கள் எல்லோரும் ஷத்திரியர்கள்" என்று பாராட்டிப் பேசிய ஆச்சாரியார், தாம் யார் என்பதை மறந்து பேசியிருக்கிறார். "நாட்டைக் காக்கும் நல்ல பணியில் இருக்கும் இவர்களை நான் ஷத்திரியர்கள் என்று அழைத்துப் பாராட்டுகிறேன். நானோ நாட்டை ஆளும் நல்ல பணியில் ஈடுபட்டிருக்கிறேன். நாட்டை காப்பாற்றுபவனும், நாட்டை ஆள்பவனும் என்னுடைய வாதப்படி ஷத்திரியர்களாக ஆகின்றனர். எனவே நான் ஒரு ஷத்திரியன் ஆகின்றேன். ஆகையால் நான் அந்தப் போர்வீரர்களைப் பார்த்து நானும் உங்களைப்போல ஒரு ஷத்திரியன் என்ற முறையில் உங்கள் சேவையைப் பாராட்டி வரவேற்கிறேன்" என்று பேசியிருக்கவேண்டும். அதைவிட்டு, "நான் ஒரு பிராமணன்—எனவே உங்களுக்கு நல்லாசி கூறி வரவேற்கிறேன்" என்று ஆச்சாரியார் பேசியிருப்பது, ஆச்சாரியாரின் அந்தரங்கம் — அடிப்படை நோக்கம் எது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. பிராமணன் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் பிராமணனே தான் என்பதைத் தவிர, ஆச்சாரியார் இந்தப் பேச்சு வேறு எதனை விளக்குகிறது?

வருணாஸ்ரமம் என்ற நச்சு மரத்தை நம்மவர்களைக் கொண்டு "அவர்கள்" வளர்ப்பிக்கும் நோக்கம் எது என்பதை இனிமேலாவது அந்த மரத்திற்கு எருவிட்டு நீர் பாய்ச்சி வளர்ப்பவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். "அவர்கள்" பாதுகாக்கப்பட "நாம்" ஏன்வதைய

சென்னை ஏஜண்டு

சென்னை நகருக்கு K. T. சம்பந்தம் அண்டு கோ. என்ற விலாசத்தாருக்கு 'திராவிட நாடு' விற்பனை உரிமை தரப்பட்டுள்ளது. முன்னாள் 'திராவிடநாடு' விற்பனையாளராக இருந்து பணியாற்றிய தோழர் G. N. சாமியே மீண்டும், அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்த முன்வந்திருக்கிறார் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். மார்ச்சு முதல் வாரத்திலிருந்து, பிரதிகள் தேவைப்படுவோர் K. T. சம்பந்தம் அண்டு கோ, 183. மவுண்ட்ரோடு, சென்னை 2. என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி.

வேண்டும் என்பதை வர்ணாசிரமத்தின் பாதுகாவலர்களாக இருக்கும் நம்மவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்—அந்த மரம்— வர்ணாஸ்ரமம் யாருடைய நன்மைக்காக ஓங்கிவளர்கிறது என்பதை ஓர் அளவுக்காவது எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

அன்றாட நடவடிக்கைகளில் எத்தனையோ புளுகுகள் நாட்டில் இடம் பெற்று ஏடுகளில் பதிந்து மக்களின் உள்ளங்களில் ஊன்றி விடுகின்றன. பல புளுகுகள் நிலைப்பதில்லை—சில, நிலைத்து விடுகின்றன.

பச்சிலையால் எந்த விதமான நோயையும் தீர்க்கலாம் என்று நேப்பாளத்து "பாபா", என்ற சிறுவனை வைத்துப் புளுகியவர்களின் 'வியாபாரம்' நீண்டகாலம் நடைபெற முடியவில்லை.

குடகு தனலட்சுமியின் 'பசியா வரத்தை' வைத்துப் புளுகியவர்களின் 'வியாபாரம்' நீண்ட காலம் நிலைக்கவில்லை. அவ்வப்போது புது மெருகுபூசப்பட்டு மார்க்கட்டுக்குக் கொண்டுவரப்பார்க்கிறார்கள், என்ற போதிலும், அதனை இப்பொழுது யாரும் சட்டை செய்வதைக் காணோம்.

'மதம்' கண்ட உலகம்!

ஆயிரம் யோசனை அகலமுள்ள இவ்வுலகத்தை ஒரு ஆமை தனது முதுகில் தாங்கிக்கொண்டிருக்கிறது. அவ்விளிம்பு வட்டத்தில் 8 திசைகளில் 8 யானைகள் அண்ட முகட்டைச் சுமந்து கொண்டிருக்கிறது. அவற்றுடன் 8 பாம்புகளும் உதவியாகச் சுமந்துகொண்டிருக்கிறது.

ஆதிசேடன் என்ற பாம்பும் ஆமை முதுகின் நடுவிலிருந்து தனது 1000 பணாமுடிகளின்மீது இவ்வுலகைச் சுமந்துகொண்டு நிற்கிறதாம். உலகில் தோன்றியுள்ள 84 இலட்சம் பேதங்களான உயிர்கள் அனைத்தையும் ஒரு காசிபர் என்ற இருடியின் 13 மனைவிமார்களால் பெற்றெடுக்கப்பட்டவைகளாம்.

(உழவன்)

ஒரு குழந்தையோடு ஓநாய்க் குணத்தை ஒட்டவைத்து நடத்தப்பட்ட புளுகும் நாளடைவில் பொய் என்று ருஜுவாக்கப்பட்டு, ஏதோ ஒருவித் மூடக்குவாதத்தால் அந்தச் சிறுவன் அவ்விதம் இருக்கிறான் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிவிட்டனர்.

ஆனால், இந்த ஆகமப் புளுகு இருக்கிறதே, இதனைப் பொய்யென நிரூபிக்க இதுவரை கையாண்ட முறைகள் எல்லாம் அவ்வப்போது நிலவிவந்த அதிகார அம்புகளால் சிதைக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கிறது. அதிகார அம்புக்கு எதிராக எந்த அம்பும் எதனையும் செய்ய முடியாதென்பதை நன்றாக உணர்ந்திருக்கும் ஆச்சாரியார், இப்பொழுது தம்முடைய அதிகாரத்தின் துணைகொண்டு அழிய இருக்கும் வர்ணாசிரமம் என்ற நச்சு மரத்தைப் பாதுகாக்க முன்வந்திருக்கிறார். எனவேதான், அவர், செல்லுமிடங்களில் எல்லாம் தன்னை ஒரு பிராமணன் என்று அறிமுகப்படுத்திக்கொள்வதன் வாயிலாக, அன்றைய ஆகமப் புளுகாகிய வர்ணாசிரமத்தைப் பாதுகாக்கப் பார்க்கிறார். இதைமனதில்வைத்தே, சத்யம், நீதி, புனிதத்தன்மை ஆகியவைதான் ஒரு பிராமணனின் கடமைகள்" என்றும் கூறிப்பிராமண "விளம்பரம்" செய்து வருகிறார்.

சத்தியத்தையும் நீதியையும் புனிதத்தன்மையையும் பிராமணன் தனக்குரியதாக எடுத்துக் கொண்டு விட்டால் மற்றவர்களுக்கு, அதாவது பிராமணரல்லாதவர்களுக்கு எஞ்சி நிற்கும் கடமைகள் எவை என்பதை எண்ணிப்பார்த்தால், வர்ணாஸ்ரமம் எதற்காக இங்கு வளர்க்கப்படுகிறது என்ற உண்மை தெளிவாகத் தெரியும். உண்மையும் அறமும் புனிதமும் இல்லாதவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். இந்த மூன்று பண்புகளும் பொதுவாக மக்களிடத்தில் அமைந்திருக்க வேண்டிய நல்ல இயல்புகளென்பது நமது (திராவிடமக்களின்) கொள்கையாகும். ஆனால் ஆச்சாரியாரோ இந்த மூன்று நல்ல பண்புகளையும் பிரித்தெடுத்து, தனியாகப்பிராமணர்களுக்கே உரிமையாக ஆக்கும் உத்தியோகத்தை மேற்கொண்டிருக்கிறார். மந்திரி பதவியோடு மறையவர் பதவியையும் வகித்து இரண்டிற்கும் ஏககாலத்தில் பணியாற்ற முன்வந்திருக்கும் இவரது அடிப்படை நோக்கம் எதுவென்பதை ஆராய்ந்துப் பார்ப்பவர்களுக்கு உண்மை விளங்காமற் போகாது.

எவ்வளவு கூர்மை பொருந்திய அதிகார அம்பையும், காலமாறுதலோடு கருத்துமாறுதலும் ஒத்துழைக்கும் நிலை, மற்ற நாடுகளைப் போல் இங்கும் ஏற்பட்டுவிட்டால், தேவையற்ற ஒன்றுக்கு எத்தகைய பாதுகாப்பிருந்த போதிலும் அதனைத் தகர்த்தெறிந்து விட முடியும் என்பதில் நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. இந்த நிலை ஏற்பட வேண்டும் — ஏற்பட்டே தீரும்.

விந்தை

திடீரென யானைமீது அமர்ந்தபடி வந்திறங்கிய ஆபீஸ் பியூனைக் கண்ட அதிகாரிகள் யாவரும், ஆச்சரியப்பட்டனர். அவனுக்கு பீஹார் சட்டசபையில். தற்காலிகமாக பியூன் உத்யோகம்! மாதச் சம்பளம் ரூ 45!! அவன். ஒரு யானையில் வந்திறங்கி, ஆபீசுக்குள் நுழைந்தானாம். 'ஏது, உனக்கு இந்தயானை?', என்று அதிகாரிகள் கேட்க தன்னுடையது என்றானாம். 'பியூனாவது, யானையை வைத்துக் காப்பாற்றுவதாவது!', என்று எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொள்ளவே, 18 வயதுள்ள அந்த இளைஞன், கலவரமடைந்து உண்மையைக் கூறினானாம். தான் ஒரு பணக்காரர் என்றும் ஏராளமான நிலம் இருப்பதாகவும் சர்க்கார் உத்யோகத்திலிருக்க வேண்டும் என்கிற தணியாத ஆசையாலேயே, பியூனாக இருக்க முன்வந்ததாகவும் கூறினானாம்!

விலக்கு

'சிவில்' வழக்கு சம்பந்தமாக கோர்ட்டுகளில் நேராக ஆஜராக வேண்டியதில்லையென்றும் அமைச்சர்கள் பக்தவத்சலம், ராஜாராம், ஜோதி ஆகியோருக்கு சர்க்கார் விலக்களித்துள்ளனர். ஏனோ!

★ 'அவர் படும் பாடு' ★

'வண்டு'

"என்னுடையதுதான், அந்தத் தோட்டம். ஏனென்றால், அப்துல்லாவும் நானும் அருமையான சினேகிதர்கள்" என்றார், பண்டிதர் பலராம்.

"சிநேகிதம் போதுங்களா! அப்துல்லா, யாரு தெரியுமில்லே—நம்ப சொந்தக்காரன்" என்று தோள் தட்டினார், பாட்சா சாயபு.

*

தகராறு இந்தளவோடு நின்றுவிடவில்லை! பலராம் பண்டிதர், தனக்கும் அப்துல்லாவுக்குமுள்ள அத்யந்த உறவை ஊராருக்குக் காட்ட, பலவிதமான செயல்களில் ஈடுபட்டார். பிரச்னைக்கு ஆளான சிங்காரத் தோட்டத்துக்காக, வீட்டிலிருந்ததையெல்லாம் விற்று, தென்னங் கன்றுகளாகவும், மாஞ்செடிகளாகவும் பயிரிட்டார். அப்துல்லாவுக்கு, ஆனந்தம்! ஊரான் சொத்தில், தன்னுடைய தோட்டம செழிப்பதைக் காண. பண்டிதரின் மனைவி பாலாமணியோ, தன் வீட்டுப் பொருள்கள் யாவும் நாசமாவதைக் காண நலிந்தாள். சில வேளைகளில், கோபித்தாள். "பைத்யம்! தோட்டம் எவ்வளவு அழகு தெரியுமா? சாகும்வரையில், நாம், தேங்காயும் மாங்காயும் பறித்துக்கொள்ளலாம். மண்ணில் போடுவது, வீணாகுமோ?" என்று, பதறிய மனைவியிடம், அடிக்கடி சொன்னார். ஊராரோ, இந்த மனுஷனுக்கேன் இவ்வளவு பித்தம்?—என்று கேட்டனர். பலராம் பண்டிதர் பரவசத்தோடு, அப்துல்லாவோடு அந்தத் தோட்டத்தை அழகுபடுத்துவதைக் கண்ட பாட்சா சாயபு, பரமானந்தத்தோடு இருந்தார்! பண்டிதரைப் பார்த்து, சில நேரங்களில் நகைக்கவும் செய்தார்.

"என்ன: பாட்சா! இப்படியே இருக்கிறீர்களே; தோட்டத்தைத் தன்னுடையதாக்கிடுவார் போல் இருக்கே, பலராம்" என்று தன்னிடம்வந்து கூறியோரைப் பார்த்து பாட்சா சிரித்தார். "இன்னைக்கு ஏதோ, அப்துல்லாவும் அவனும் சிநேகிதமா இருந்துட்டாப் போதுங்களா? என்ன இருந்தாலும், இரத்தபாசம் எங்கே போகும்! அப்துல்லா, யாரு? என் அண்ணன் பிள்ளை இல்லையா?" என்று கேட்டார். அவரிடம் பதைட்போடு விஷயத்தைச் சொன்னோரும், 'உண்மைதானே!' என்று கூறிவிட்டுத் தமது வேலைகளைக் கவனித்துச் சென்றனர்.

*

அந்த ஊரில், செல்வநாதர் என்பவர், பெரிய மிராசுதார்! அவருக்குக் குறையாத அளவில் வசதியும் வாய்ப்பும் பெற்றிருந்த மற்றோர் மிராசுதார், அன்பானந்தர். ஒரு ஊரில், இரண்டு மிராசுதார்களிருந்துவிட்டாலே, எலியும் பூனையுமாகத்தானே இருப்பர்! அன்பானந்தர், தன்னுடைய எடுபிடிகளுக்கு, 'அதிகக் கூலி' கொடுத்து கெடுத்துவிடுகிறார், என்பது செல்வநாதரின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு பேருரு எடுத்து இருவருக்குமிடையே தீராப்பகையை உண்டாக்கிவிட்டது! எப்போது, அன்பானந்தனை ஒழிக்கலாம்?—செல்வநாதரின் கனவு. எப்போது செல்வநாதனுக்குப் புத்தி வரச் செய்யலாம் — இது, அன்பானந்தரின் ஆசை. இந்த இரண்டு துருவங்களுக்கிடையேயும் அந்த ஊர் மக்கள் அல்லாடிக்கொண்டிருந்தனர்.

"அன்பானந்தர் குணம் வருமோ?" என்பர் சிலர்.

"குணமிருந்தால் போதுமா? கேட்டபோதெல்லாம் பணம், பணமா, தருவது யார்! செல்வநாதனல்லவோ......" இப்படிக் கூறுவர் சிலர்.

ஊராருக்குள்ளேயே இரண்டு கட்சி.

*

சிங்காரத் தோட்டத்தைச் செப்பனிடுவதில் ஈடுபட்டிருந்த பலராம் பண்டிதர், வீட்டிலிருந்த எல்லாப் பொருள்களையும், விரயமாக்கிவிட்டார். இதனால் சொந்த வீட்டில் சாப்பாட்டுக்கே திண்டாட்டம் வரலாயிற்று! அதனால், மிராசுதார் செல்வநாதரிடம் போனார் — கை நீட்டிக் கடன் கேட்டார். பண்டிதரைக் கண்ட, செல்வநாதருக்கு, தன்னுடைய பக்கம் ஒரு ஆள்வந்து சேர்ந்துவிட்டது என்கிறஆனந்தம். அதனால், வேண்டிய பணத்தைக் கொடுத்தார்! "வேண்டும்போதெல்லாம், வாரும் பண்டிதரே! உமக்கில்லாததா?" என்று உபசாரமொழிகளும் உரைத்தார். பண்டிதரின் உச்சி, குளிர்ந்தது! மனைவியிடம், செல்வநாதர் வீட்டிற்குப்போனால் நடைபெறும் உபசாரங்களைச்சொல்லிச் சொல்லி பூரித்தார். அடிக்கடி போக வரலானார். பண்டிதர், செல்வநாதர் பக்கம் சேர்ந்திட்டா

மறைவு

அய்யம்பேட்டை தி. மு. க. தோழர் மா. பெருமாளின் பாட்டி அழகம்மையார் 26—2—54-ல் காலமான செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

ராமே!"—எனும் பேச்சுகள், ஊரார் மத்தியில் அடிபடலாயின.

இந்தப் பேச்சு பலமாகப் பல மாகப் பண்டிதரின் காதிலும் விழுந்தது. அப்போதுதான் அவருக்கு, 'பகீர்' என்றது. நம்மையறியாமலே, இந்தப் பெரிய மிராசுதார்களின் படையில் சேர்ந்து விடுவோமோ?—எனும் கிலி, அதிகமாயிற்று.

இதனால், தன்னைச் சந்தித்தோரிடமெல்லாம் சொன்னார். "நான், எந்தப் பக்கமும் சேரலிங்க! நமக்கு இவரும் வேண்டியவர்தான் — அவரும் வேண்டியவர்தான். இரண்டு கட்சியிலும் நான் சேரமாட்டேன். என்னமோ, இரண்டு பேரும் ஒற்றுமையா இருந்தா நல்லாயிருக்கும். ஊர், கெடாமலிருக்கும். அதுதான், என் ஆசை"

இப்படி பண்டிதர் பேசுவது, செல்வநாதர் காதில் விழுந்தது. 'அப்படியா?', என்று கேட்டுக் கொண்டு பேசாமலிருந்தார். 'நம்மிடம் கடன்பட்ட இவன், எங்கே சென்று விடுவான்?', எனும் தைரியம் அவருக்கு. இப்படி, நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

*

பெரிய மனிதர்களின் சண்டை, உள்ளுக்குள்ளேயே புகைந்து கொண்டிருந்தது போல, பாட்சாசாயபுக்கும் பலராம் பண்டிதருக்கும் சிங்காரத் தோட்ட விஷயமாக இருந்த தகராறும் முற்றிக் கொண்டேயிருந்தது. பாட்சா, தன்னுடைய மாடுகளை ஒரு நாள் சிங்காரத் தோட்டம் பக்கமாக ஓட்டியனுப்பினார்! அதைக் கண்ட அப்துல்லா, மாடுகளை, விரட்டலாமல்லவா? அப்படிச் செய்யவில்லை— இருக்கவே இருக்கிறார் பலராம், எனும் எண்ணத்தில் பலராமரிடம் விஷயத்தைச் சொன்னார்! வேகத்தோடு, தடியை எடுத்துக்கொண்டு, பாய்ந்தார், பலராம். இரண்டு மூன்று காவல்காரர்களைப் பிடித்து, சிங்காரத் தோட்டத்துக்கு காவலிருக்கச் சொன்னார். வீட்டிலோ மனைவி, 'அது இல்லை—இது இல்லை' என்று அலறிக் கொண்டிருந்தாள். அதற்கெல்லாம், 'ஏதடி, என்னிடம் பணம்?', என்று சீறி விழுவார், பண்டிதர். ஆனால், அப்துல்லாவின் தோட்டத்துக்கு மட்டும், காவல்காரர்கள் நியமிக்கப் பணம் கிடைத்தது!

*

ஒரு நாள், பாட்சாசாயபு, செல்வநாதர் மாளிகைக்குச் சென்றார். செல்வநாதர், அன்பானந்தருக்கு எதிராக ஆட்களைத் திரட்டிக் கொண்டிருந்த நேரம், அது பாட்சாவைக் கண்ட செல்வநாதர், பூரித்தார். வீட்டுக்குள்போய், ஒரு துப்பாக்கியைக் கொண்டுவந்து கொடுத்தார்! தன்னுடைய கட்சியில் சேர்ந்தோருக்கெல்லாம், அன்பானந்தனை எதிர்க்க, ஆயுதங்களைத்தந்து உஷார் செய்துகொண்டிருந்தார், செல்வநாதர். அந்த சூட்சுமம் தெரிந்த பாட்சா, துப்பாக்கியை வாங்கிக் கொண்டு, வீட்டுக்குத் திரும்பினார்!

விஷயம், பண்டிதர் காதுக்கு எட்டிற்று. பயந்தார். பலரிடம் பேசினார். பயன் ஏற்படவில்லை. தன் மனைவியைப் பார்த்து, 'பார்த்தாயா பாலா! பாவிப் பய, துப்பாக்கியை வச்சிருக்கான். துப்பாக்கி, எவ்வளவு கேடுதரும். ஊரைக்கெடுக்க அந்த செல்வநாதன் திட்டம் போடுறான்—அதுக்கு இவனும் துணை போகிறான். இது, நியாயமா! ஊருக்கு நல்லதா!!' என்று ஆவேசத்தோடு, பேசினார்.

மனைவிக்கு கணவன் சொல்வது உண்மையென்று பட்டது. அவள் என்ன செய்யமுடியும்?

'ஏங்க! யார், எப்படிப்போனா, என்ன?"

"என்ன அப்படிச் சொல்றே? அவன் துப்பாக்கிவாங்கிவந்திருக்கிறது—துணை போகவா. இல்லே! நம்மை மிரட்ட."

"நாம், என்ன கேடு, செஞ்சோம்!"

"சிங்காரத் தோட்டத்தைப் பறிக்க, இந்தச் சூழ்ச்சி, பாலா!"

"நமக்கேன், அந்தத் தோட்டம்?"

"தோட்டம் விஷயமட்டுமா! இப்படி கண்ட கண்டவனெல்லாம், துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு அலையலாமா?"

"கூடாதுதான்!"

"செய்யறானே இவன்?"

"அதுக்கு யார் காரணம்?"

"என்ன?"

"இல்லே! துப்பாக்கி இவன் கைக்கு வர்றதுக்கு, யாருங்க காரணம்?"

"அந்தப் பாவிப்பய, செல்வநாதன்!"

"உங்களுக்கு ராஜோபசாரம் செய்றதச் சொல்வீங்களே! அவனை, 'பாவிப்பய'ன்னு சொல்றீங்களே!!"

பண்டிதர், விழித்தார்! கேட்பது, மனைவி!—என்ன, சொல்வது அவளுக்கு? இப்போது, அவனிடம் அதிகம் பேசாமல், ஊராரிடம், இந்த அக்கிரமத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருடைய, கதி, என்ன? யோசியுங்கள்!

[படித்தபின்!:— பண்டித நேரு, காஷ்மீர், பாகிஸ்தான், அமெரிக்கா, ரஷ்யா, ஆயுத ஒப்பந்தம் — ஆகியவைகளை நினைவு படுத்திக்கொள்க]

அறிவின் வழியில்!

கம்பிமீது உலர்த்திய துணி காற்றிலே ஆடிக்கொண்டிருந்ததே பிரம்மாண்டமான ஜெப்பலின் விமானம் அமைக்க வழி காட்டியது

தோட்டத்துப் பாதையின் குறுக்கே சிலந்தி கட்டியிருந்த கூடே தொங்கும் பாலம் அமைக்க வழி காட்டியது.

அடுப்புமீது வைத்த டீ கெட்டில் பொங்கிக் கொந்தளித்ததே நீராவி எஞ்சின் அமைக்க வழி காட்டியது.

கோபுரம் ஒன்றில் தொங்கி ஊஞ்சலாடிக்கொண்டிருந்த ஒரு தீபமே பெண்டுலம் அமைக்கவழி காட்டியது.

மரத்திலிருந்து ஓர் ஆப்பிள் பழம் கீழே விழுந்ததே 'க்ராவிடி' என்ற ஆகர்ஷண சக்தியைக் கண்டுபிடிக்க வழிகாட்டியது.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரி லீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 7—3—54 [ஞாயிறு

வரவும்—செலவும்

★

சென்னை மாநிலத்தின் வரவு செலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்து விட்டார், நிதியமைச்சர்.

இந்திய உபகண்டத்தின் வரவு செலவு திட்டத்தை, டில்லியில் வெளியிட்டுவிட்டார், தேஷ்முக்.

டில்லி 'பட்ஜட்' வெளியானதும்' பம்பாயிலிருக்கும் செயற்கைப் பட்டுத் தயாரிப்போர், தங்கள் தொழிலை நிறுத்திவிடவேண்டியதுதான் என்று அபாய அறிவிப்பு செய்துள்ளனர்.

சென்னை 'பட்ஜட்' வெளியானதும், 'ஆச்சாரியார் ஆட்சியின்' சாயல் நன்றாகத் தெரிகிறது என்று பெருமூச்சு விடுகின்றனர்—மக்கள்.

முதலாளித்துவ அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்தச் சமூகத்தில், இத்தகைய அரசாங்கங்களின் 'பட்ஜட்', ஒரு கணக்கப்பிள்ளையின் காரியம் என்றளவில்தான் கருத வேண்டியிருக்கிறது.

எவ்வளவு வரவு வரும்—எவ்வளவு செலவாகும்—துண்டு விழுவது எவ்வளவு?—இதுதான் 'பட்ஜட்' தயாரிப்பதற்குள்ள அடிப்படை.

இப்படித் தயாரிக்கப்படும் 'பட்ஜட்' நாட்டின் எல்லா நிலைமைகளையும் மனதில் வைத்தே வகுக்கப்படுகிறதென்று கூறப்படுகிறது. தன்னுடைய 'வரவு செலவு' விளக்கத்தைத் தந்த தோழர் சுப்பிரமணியமும், அவ்வாறுதான் வெளியிட்டுள்ளார். அவருடைய 'வரவு செல'வைக் கவனிக்கும்பொழுது, பல புது வரிகள் முளைத்துள்ளன! நாட்டின் மன நாடியை அறிந்து தயார் செய்த திட்டம்போல் காட்சியளிக்க வேண்டுமெனும் கருத்தில், சில கண் துடைப்புக் காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

டில்லியாரின் வரவு செலவோ—வழக்கம்போல், ஐந்தாண்டு திட்டம்—பாதுகாப்புச் செலவு—என்கிற அகவலோடும் புது வரிகளோடும் இருக்கிறது. அந்தச் சர்க்கார், தன்னை நம்பியிருக்கும் மாகாணங்களுக்கு' என்னென்ன செய்யப்போகிறது என்னும் விளக்கம் எதுவும் தெரியவில்லை!

நிதி மந்திரிகள் தம்முடைய 'வரவு—செலவு'களை, ஒப்புவித்து விட்டார்கள். 'துண்டு விழுகிறது—பணம் வேண்டும்' என்றும் சுப்ரமணியம் சொல்லியிருக்கிறார்.

நாட்டில் தாங்கள் செய்யும் செலவுகளையும், பெறும் வரவுகளையும் அமைச்சர்கள் சமர்ப்பித்து விட்டார்கள்—ஆண்டுதோறும், தவறாமலும், செய்யப்பட்டு வருகிறது.

ஆனால், செலவும் வரவும் நிர்ணயிக்கப்படாமல் திண்டாடும் மக்களின் 'பட்ஜட்'டைப்பற்றி இந்த மகானுபாவர்கள் யாரும் கருதியதாகத் தெரியவில்லை.

முப்பதுகோடி மக்கள் வாழும், நிலப்பரப்பு! — என்று முழக்குகிறது, டில்லி.

மூன்று கோடி மக்கள், (கிட்டத்தட்ட) வாழும் மாநிலம்! — என்று கூவுகிறது, சென்னை.

இந்த மக்களில் ஒவ்வொருவருடைய வரவும் செலவும் எப்படியிருக்கிறது? எண்ணினால், விசித்திரமாயிருக்கும்!

இவர்களில் எத்தனையோ கோடி மக்களுக்கு, 'வரவு' என்ற ஓர் இனமே, கிடையாது! ஏனெனில், அவர்களுக்கு, எவ்வித வேலையுமே கிடையாது!!

அப்படி 'வரவு' வருவதாகக் கூறிக்கொள்ளும் மத்தியதர மக்களின், 'மாதாந்திர பட்ஜட்டை' எடுத்துப் பார்த்தால், துண்டுவிழும் தொகையை அவர்கள் சரிக்கட்ட செய்யும், விசித்திர விபரங்கள் கிடைக்கும்.

சர்க்காருடைய வரவு செலவுத் திட்டத்தில், 'துண்டு விழுகிறது' என்றதும், 'புதுவரி போடுவோம்! கடன் வாங்குவோம்!', என்றெல்லாம் கூறுகிறார்கள் — பாங்கிகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் முதலியவைகளில் கிடக்கும் பணத்தை 'வரவு'வைத்துக் கொள்ளுகிறார்கள்.

ஆனால், அந்தச் சர்க்காரின் எஜமானன, 'பொதுஜனம்' தன்னுடைய மாதாந்திர 'பட்ஜட்டை' சரிகட்ட, எந்த வரியைப் போட முடியும்? மூன்றுவேளை சாப்பிடுவதை, இரண்டு வேளையாக்கிக்கொள்! — என்றுதான், சுருக்கிக் கொள்ள முடியும். அப்படிச் சுருக்கிக்கொண்டும் முடியாத காரணத்தால் அவன் வீட்டிலிருக்கும் தோடு, மூக்குத் திருகு, காப்பு, கொலுசு இவைகள், 'மார்வாடி'யின் குறிப்பேட்டில், ஏறும்.

தொழிலாளியின் 'தினசரி பட்ஜட்'டை எடுத்துப்பார்க்கவே வேண்டியதில்லை. குழிவிழுந்த கண்களும், வளைந்தமுதுகும், ஒட்டியவயிறுமே, 'கணக்குப்புததகங்கள்! அவைகளைக் கண்டாலுமே, வரவு செலவு விபரம், புரிந்துவிடும்.

இவ்வண்ணம், வரவில்லாதோர்—வரவிருந்தும் வாழ முடியாதோர்—வரவுக்குப் பதில் வறுமையையே பூரணமாகக் கொண்டோர் — ஆகியோரின் தொகை, நாட்டின் நாலு பக்கங்களிலும், அதிகரித்துக் கிடக்கிறது.

இதனால், நாட்டின் ஜனத்தொகை எட்டில் 'எண்கள்', குறைந்து கொண்டிருக்கின்றன — ஆங்காங்கும். பலர் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், பட்டினிக் கொடுமையாலும், துவண்டுவிழும்

தமது உடலை, ரயிலடியிலும், மரக் கிளைகளிலும் துண்டாக்கிக்கொள்ளுகின்றனர்!

இந்தக் கோரங்களைப்போக்குகிற அளவில், என்று 'பட்ஜட்' வரும்? இதுதான், நம் கவலை!

இன்று இந்த அமைச்சர்கள் சமர்ப்பித்திருக்கும் 'பட்ஜட்'டுகளைப் பற்றி, நாம் கூறவேண்டியதில்லை — நாடே கூறும்!

ஏனெனில், காங்கிரஸ் ஆட்சியின் 'பட்ஜட்' என்றாலே — ஏதாவது புதுவரிகள்—ஒரு சோகபுராணம்—கொஞ்சம் ராக ஆலாபனம் — என்பதை மக்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தொடர் கதையின் மற்றோர் அத்தியாயமாகவே, இந்த ஆண்டு, சர்க்காரின் வரவு செலவுத் திட்டங்கள் இருக்கின்றன.

புது ஒளி இல்லை! — மாறாக, மக்கள் மன்றத்துக்கு சில வரிகள் 'வரவு' வந்திருக்கின்றன. சமூகக் கேடுகளைச் சாய்க்கும் அடிப்படையில் 'வரவும் செலவும்' தயாரிக்கப்படும்வரை, இவர்களாட்சியில், இது போன்ற 'வரவுகளை'யும், 'உயிர்ச் சேலவு'களையும், தாயகம் தாங்கிக் கொள்ளத்தான்வேண்டும்போலும்!!

★

'இருவரை' இழந்தோம்!

நீதிக்கட்சியின் வெற்றித் தூண்களில் ஒருவராக விளங்கிய நெடும்பலம் சாமியப்பா அவர்கள், பிரிந்து விட்டார் எனும் செய்தி கேட்டு, அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி அடங்குமுன்னதாகவே, தூத்துக்குடி நண்பர் வி. வி. தனுக்கோடி அவர்களும் போய்விட்டார் எனும் திடுக்கிடக்கூடிய செய்தி கிடைத்திருக்கிறது.

சாவின் விசித்திரங்களைப்பற்றி யாவரும் அறிவோமென்றாலும், நம்முடன் நெருங்கிப் பழகியோரின் பிரிவுபற்றி அறியும்போது, நெஞ்சம் திடுக்கிடத்தான் செய்கிறது.

நீதிக் கட்சியின் உயர்வுக்குப்பாடுபட்டு, தக்க சமயங்களிலெல்லாம் தன்னுடைய தளராத ஒத்துழைப்பைத் தந்து, மக்கள் மன்றத்தில் தனியிடம் பெற்றவர், நெடும்பலம் சாமியப்பா. அவர், கூட்டுறவு இயக்கத்துக்காகவும், தமிழாளர் இயக்கத்திலும், சாகும்வரை பொறுப்புகள் ஏற்றுப் பணி புரிந்தவர். பல தடவைகள் அரசு மன்றத்தின் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அந்தக்கால நீதிக்கட்சியின் வரலாற்றைப் புரட்டினால், சகோதரர்கள் போலப் பவனிவந்த பன்னீர்ச் செல்வமும்—சாமியப்பாவும், தென்படுவார்கள். ஓமான் கடல், செல்வத்தை விழுங்கிய பின்னர், சாமியப்பாவே, நீதிக்கட்சியின் தொண்டர்களுக்கும் பெரியார் அவர்களுக்கும் 'செல்வமாக' விளங்கினார்.

அத்தகைய நல்லதோர் நண்பரை இனி, நாம் காண முடியாது என்றெண்ணும்போது, உள்ளம் விம்மத்தான் செய்கிறது. அவரது பிரிவால் வருந்தும் சுற்றத்தாருக்கும் அவருடைய புதல்வர்கள் என்.எஸ். ராமலிங்கம், அருணாசலம் ஆகியோருக்கும் நம்முடைய அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் இந்நேரத்தில், தூத்துக்குடி தோழர் வி. வி டி. அவர்களிறந்த செய்தி நம்மைக் கலங்கச் செய்கிறது.

கடந்த ஆண்டு இதே திங்களில் தான், நமது பழம்பெரும் வீரர் பாண்டியனைப் பறிகொடுத்தோம். இப்போது நண்பர் தனுக்கோடி அவர்களை இழந்து விட்டோம்.

நண்பர், நம்மீதும், நமது கழக அறப்போரின் விளைவாகச் சிறையில் கிடந்துழலும் தூத்துக்குடி கழக வீரர்கள்மீதும் வைத்திருந்த அன்பினை எண்ணும்போது, துக்கம் நெஞ்சைத் துளைக்கிறது.

அவரது பிரிவால் வருந்தும் நண்பர் வி. வி. ராமசாமி அவர்களுக்கும் வி. வி டி. அவர்களின் புதல்வருக்கும், குடும்பத்தாருக்கும் எந்த வகையில், ஆறுதல் கூறுவதென்று தெரியவில்லை. அத்தகைய பண்புடன் பழகினார்! பிரிந்துவிட்டார்!! அவரது பிரிவு, பலருக்கு நஷ்டம். அவர்கள் அனைவருக்கும் நம்முடைய அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★

தேனீயும் பக்தரும்

மனிதர்களால் முடியாத காரியத்தை, தேனீக்கள் செய்தனவாம். ஜப்பல்பூருக் கருகிலுள்ள, ஓரிடத்தில், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விக்ரகத்துக்காக, பக்தர்கள் செய்த 'யக்ஞம்' நடைபெறாதபடி தடுத்து, அந்தப் பக்தர்களை, விரட்டியோட்டியிருக்கின்றன, தேனீக்கள். 'யக்ஞம்' ஆரம்பித்து, 'ஹோமம்' நடத்திய பொழுது அதன் புகை, அருகேயிருந்த மரத்தின் மீது தாக்கியிருக்கிறது. அந்த மரத்தில், தேன்கூடு ஒன்று இருந்திருக்கிறது! புகை தாக்கவே, அங்கிருந்த தேனீக்கள், ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து புரோகிதர்கள் மீது, 'படை' யெடுத்திருக்கின்றன.

பக்தர்கள், 'பகவான்' திருநாமத்தை உச்சரித்தபடி, 'தேனீக்களே, செல்க!' என்று கூறிக்கொண்டிருக்கவில்லை—விழுந்தடித்து, ஓடியிருக்கிறார்கள்—வேற்றிடம் தேடிச் சென்றிருக்கிறார்கள்.

தாங்கள் தேனைச் சேகரிக்கப் பட்டபாடு, தேனீக்களுக்கன்றோ, தெரியும்? அத்தேனுக்கு ஆபத்து வருகின்றதென்று தெரிந்ததும், 'படை'யெடுத்து பக்தர்களை விரட்டியிருக்கின்றன.

ஒருவிதத்தில். உழைப்பால் உலரும் உத்தமர்களையும், 'தேனீ'க்களுக்கு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. உழைத்து, ஊராரிடம் கொடுப்பதில் — தேனீயும் பாட்டாளியும் ஒரே ரகம், என்பதாக

அந்தத் தேனீக்களைவிட, இந்தத் 'தேனீ', பக்தர்களால் அடையும் தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. உழைத்து உலரும் இந்த உத்தமன் கற்பூரமென்றும், தேங்காயென்றும், தட்சணையென்றும், அர்ச்சனையென்றும், 'முடிச்சி'யிலிருந்து அவிழ்த்து கொடுக்கும் தொகை ஏராளம்! அப்படி 'போகும்', வழிகளைப்பற்றி ஆராயாமல், உழலுகிறான், ஏழைப்பாட்டாளி. ;தேனீக்களைப்போல, இவனுக்கும், ஆத்திரம் வந்தால், புரோகிதப்பூனைகள், வாழ முடியுமா? வக்கணைகள் பேசமுடியுமா!!

எவ்வழி செல்வர்?

S. K. பட்டீல்! — இந்தப் பெயரைச் சொல்லிவிட்டு, ஒரு முறை நம்மை ஏறெடுத்துப் பார்ப்பார், காங்கிரஸ் நண்பர்.

யாரய்யா, அது?—என்று கேட்க வேண்டாம், நாம். அவரே, சொல்வார். "யார், தெரியுமா? பம்பாயில் எதிர்க் கட்சிகளையெல்லாம் பஞ்சு பஞ்சாகப் பறக்கவிட்ட, 'பஸ்மாசூரர்' — தேர்தல் முறைகளையெல்லாம், கற்ற பெரிய தந்திரி"

அவருக்கென்ன?—என்று நாம், கேட்கவேண்டாம்—நண்பரே, சொல்வார். "அவரை அனுப்பப்போகிறது, எங்கள் பார்லிமெண்டரி கட்சி. பண்டிதநேரு சொல்லிவிட்டார் பார்! இந்தப் பசங்களையெல்லாம், குப்புற வீழ்த்தி, எங்கள் பாரத மணிக்கொடியை, திருவாங்கூரிலே ஜகம் புகழுவண்ணம், பறக்கவிடப் போகிறார்!"

இவ்வண்ணம், ஒவ்வொருசெய்தியையும் நம்மிடையே கூறும்போது, உற்சாகத்தையும் உணர்ச்சியையும் அள்ளித்தெளித்த காங்கிரஸ் நண்பர்கள், தத்தமது முகத்தை மூடிக்கொள்ளும் வகையில், திருவாங்கூர் தேர்தல் முடிவுகள், வெளிவந்து விட்டன. பட்டீல் போன்றோர் வராத காரணத்தாலும், பண்டித ஜவகர்லாலின் திருக்குரல் ஒலிக்காத காரணத்தாலுமே, திருவாங்கூர் மக்கள் கடந்த தேர்தலில் காங்கிரசுக்கு ஓட்டுப் போடவில்லை எனும் கருத்தில், காங்கிரஸ் தோழர்களெல்லார், பேசினர்.

"பார்! பார்!! பண்டிதநேரு, புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்வதை......"

"தெரியுமா, சங்கதி? ஒவ்வோரிடத்திலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள், எப்படித் திரண்டிருந்தார்கள்?"

"மகாத்மா! உம் திருவடிபடாததால், கெட்டது, இத்திருவாங்கூர், நீரே, கலியுகக் கண்ணன். பாவிகளாம் இந்த ராட்சதர்களிடமிருந்து சீதாதேவி போன்ற எமது திருவாங்கூரை மீட்கவந்த கல்யாணராமா!—என்று கரங் கூப்பி, ஒரு பெரியவர், நேருவின் காலில், சாஷ்டாங்கமாக வீழ்ந்தார் — தெரியுமா?"

இவ்விதமெல்லாம், தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிப் பெருமிதமாகப் பேசிக் கொண்டனர். நேருவின் ஜோதி! அவருக்குப் போடப்பட்ட மாலைகள்! நடைபெற்ற பிரச்சாரம்! —ஆகியவைகளைப்பற்றி, ஆட்கள் மட்டுமல்ல, அரசியல் ஏடுகளும் பிரமாதமாய்ப் பிரசுரித்தன. அவ்வளவு ஆவல்! அவ்வளவு ஆர்வம்!—அணை புரண்டோடியது, இந்திய உபகண்ட முழுமையும்

சென்னைச் சீமான் ஆச்சாரியாரும் சென்றார், திருவாங்கூருக்கு. குட்டிக் கதைகளும் விசித்திர வியாக்யானங்களும் தந்து, 'நிச்சயம் காங்கிரஸ் ஜெயிக்கும்' என்று உறுதி புகன்றார். "அகில உலகும் இத் தேர்தலை கவனிக்கிறது. பண்டிதநேருமீது, உங்களுக்கெல்லாம் நம்பிக்கையுண்டென்றால், காங்கிரசுக்கு வோட்டு போடுங்கள்—இல்லையென்றால், உதிரிகளுக்குப் போடுங்கள்" என்றார்.

ஆனால், முடிவு! இதோ, கேரளம், கேலிக்குரல் எழுப்புகிறது, படை பலம் தாங்கி, குரல் ஒலி எழுப்பி, கும்மாளம் கொட்டிய தேசியத் தலைவர்களை நோக்கி!

"சரிந்து விட்டோம்" — இது. காங்கிரஸ் தலைமையின், விளக்கச் சிதறல்.

"காரணம் புரியவில்லை!' இது காங்கிரஸ் 'கன'த்தின் பெருமூச்சு

"எதிர்பார்த்தோம் — நடக்கவில்லை!, இது, ஏமாற்றம் கண்டவரின், சோகக்குரல்.

எந்தக் காங்கிரஸ் தோழரைப் பார்த்தாலும், முகத்தில் சோகத்தின் சாயல் படர, குரலில் தெம்பு குறைய, தென்படுகின்றனர். உண்மையில், காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சி பற்றி அல்லும் பகலும் சிந்திப்போருக்கு, இந்தச் சரிவு, மனவேதனையாகத்தான் இருக்கும். அத்தகைய மனவேதனை யாருக்கேற்படுமோ, அவர்கள்தான் உண்மையான காங்கிரஸ்காரர்களும் கூட. ஆனால், இன்னும் சிலர் இருக்கிறார்கள்—வெயிலுக்காக, நிழல் பக்கம் வந்த வீரர்கள் — அவர்கள் கூறுகிறார்கள், "காங்கிரசுக்குப் போதிய மெஜாரிடி கிடைக்கவில்லையே தவிர, அது பெற்றிருக்கும் மொத்த வாக்குகள், எத்தனை தெரியுமா? காங்கிரஸ் கட்சி பெற்ற அளவுக்கு எந்தக் கட்சி பெற்றிருக்கிறது!", என்பதாக. அப்படிக்கேட்போர், ஒன்றை மறந்து விட்டார்கள். எதிர்க்கட்சிகளில் ஒவ்வொன்றும் தத்தமக்கென சில தொகுதிகளில்தான் போட்டியிட்டன. எனினும் அவைகளில் பெரும்பாலானவற்றில், வெற்றி பெற்றிருக்கின்றன. ஆனால், காங்கிரசோ 115 இடங்களுக்குப் போட்டியிட்டது. 45 இடங்களையே, பெற முடிந்தது! மற்ற இடங்களில் வைக்கப்பட்டிருந்த பெட்டிகளிலும் ஓட்டுக்கள் விழுந்திருக்கலாமல்லவா? அதைக் கூட்டிச் சேர்த்தே, கணக்கிடுகின்றனர்! அப்படிப் பார்த்தாலும், காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் வோட்டெண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால், அவைகளுக்குத்தான் காங்கிரசை விட அதிகமான வோட்டுகள் கிடைத்திருக்கின்றன. எனினும் இவர்கள், 'காங்கிரஸ் சரியவில்லை' என்றும், 'அதுவே பலம் பொருந்திய தனிக்கட்சி' என்றும், தத்தமது ஏடுகளில், தீட்டிக் காட்டுகின்றனர்.

காங்கிரஸ் தலைமையே, தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டது!

இவர்களோ, தோல்வியை மறைத்துக் காட்ட 'புனுகு' பூசுகின்றனர்!! இப்படிப் 'புனுகு' பூசும் ஆசாமிகளின் நடவடிக்கைகளை எண்ணும் போதுதான், 'சேற்றில் சிக்கிய வண்டி'யின் ஞாபகம் வருகிறது.

சென்னையிலுள்ள ஏடுகளில், இவ்விதம் உண்மையைத் திரித்துக் கூறுவதில் பெருமைப்படுகிற ஏடுகளில் குறிப்பிடக்கூடியது, 'தினமணி' யாகும். அதில் காங்கிரஸ் கட்சி தவிர்த்த ஏனைய செய்திகள், தெளிவாக வராது. எதையெடுத்தாலும் காங்கிரஸ்!—இதுதான், அந்த ஏட்டின் முழக்கம். இப்படி முழக்கும் அந்த ஏட்டின் அதிபதி, சாதாரணமான ஆளல்ல—பெரிய முதலாளி, கோயங்கா. அவருடைய விருப்பத்தைத்தான், அந்த ஏடு பிரதிபலிக்கிறது. முதலாளியான அவருள்ளத்தில், முற்போக்குக் கட்சிகள், காங்கிரசை முறியடித்துவிட்டன எனும் செய்தியை எண்ணவும் — எடுத்துரைக்கவும் — பயம் ஏற்படுகிறது. இதுபோன்ற பயம் கொண்டோரின் பாசறையாகிவிட்ட காரணத்தாலேயே, காங்கிரஸ் சரியும் கோட்டையாகி வருகிறது! இந்த உண்மையை நாம் உரைத்தால்நமது நண்பர்கள், ஏற்பதில்லை.

காங்கிரசின் மோகனத்தைக் காட்டி, அத்தகைய காங்கிரசின் ஆட்சிதான் நீடிக்கும் — அதனை ஆட்டிப்படைப்பது நாங்கள் — அஞ்சவேண்டாம், அதனால் — என்று வெளிநாட்டு முதலாளிகளுடன் வியாபார பேரம்பேசும் 'முத்தையாக்கள்', அங்கே மலிந்துவிட்டனர்.

இந்த ஒரே காரணத்தால்தான், திருவாங்கூர் கொச்சியில், மறு தேர்தலும் நடத்தப்பட்டது. திருவாங்கூருக்கு வந்து சென்ற அமெரிக்க முதலாளிகள் அனைவரும், 'தெற்கிலே, கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது' என்று சொல்லிச் சென்றதைக் கேட்டதும், தங்களது கித்தாப்பைக் காட்டிக்கொள்ளவேண்டுமெனும் பேராவல் பிறந்தது, இங்குள்ள பெரிய கட்சிக்கு.

அதனால்தான், தங்களுடைய அத்தனைப் பீரங்கிகளையும் கொண்டு வந்து திருவாங்கூரில் முழக்கமிட்டனர். இந்தத் தேர்தலை, பண்டித நேருவின் செல்வாக்கைக் காட்டும் 'ஸ்கேல்' எனவும் பேசலாயினர். ஆனால், விளைவு விபரீதமாயிருக்கிறது!

திருச்சியில்
பொதுக் குழுக் கூட்டம்

—*—

"7—3—54 ஞாயிறன்று, திராவிட முன்னேற்றக் கழக மாநில பொது குழுக் கூட்டம் திருச்சி கருணாநிதி பூங்காவில் (P. T. C. கட்டிடத்தில்—திருச்சி டவுன் ஸ்டேஷன் சமீபம்) நடைபெற, எல்லா ஏற்பாடுகளும் திருச்சி மாவட்டக் கழகத்தால் சிறந்த முறையில் செய்யப்பட்டு வருகிறது.

வெளியூரிலிருந்து வரும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு உணவு, தங்குவதற்கு இடம், குளிப்பதற்கான எல்லா வசதிகளும் நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளன." என மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் பராங்குசம் தெரிவிக்கிறார்.

*

"திருவாங்கூரில் மறு தேர்தல் நடந்ததற்கும், அமெரிக்க முதலாளித்துவத்துக்குமிடையே, முடிச்சுப் போடுகிறாயே! இதற்கும், அதற்கும் என்னப்பா சம்பந்தம்?" என்று நீங்களல்ல! — தேசிய நண்பர்கள் கேட்கலாம்.

உண்மை—அவர்கள்மீதும் குற்றமில்லை. ஏனெனில், "திருவாங்கூரில் தேர்தல் நடப்பதே எங்களுக்கு ஜனநாயகத்தின்மீதுள்ள நம்பிக்கையை காட்டுவதாகும்" என்று தேசியத் தலைவர்கள், பேசுவதைக் கேட்ட காதுகள் அவர்களுடையது. அதனால், நாம் கூறுவதைக் கேட்கும் போது கசப்பும் கடுங்கோபமும் ஏற்படலாம்—நியாயமுங்கூட.

அந்த நபர்களுக்குப் பணிவோடு ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். திருவாங்கூர் தேர்தல் பரீட்சைக்கும், அமெரிக்க வல்லரசின் நயபிக்கை வேட்டைக்குமிடையே சம்பந்தம் உண்டு என்பதை கீழ்கண்ட செய்திவிளக்கும்.

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுதத் தளவாடங்களை அளிப்பது பற்றி, எங்கும் கண்டன மாரி கிளம்பியுள்ளதல்லவா? அதைப் பற்றி, சின்னாட்களுக்குமுன், பண்டித நேரு பார்லிமெண்டில் முழக்கமிட்டாரல்லவா? அன்றைய தினம், அவருடைய முழக்கத்தைக் கேட்ட பார்லிமெண்டு உறுப்பினர்கள் வெளியில் வந்து பேசிக்கொண்டார்களாம்—ஏடுகள் வெளியிட்டுள்ளன அத்தகவலை. "திருவாங்கூர் கொச்சியில், காங்கிரஸ் தோல்வியடைந்து, கம்யூனிஸ்டுகளும் பிறரும் வெற்றிபெற்றதற்குக் காரணம், வேறெதுவுமல்ல. அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுதத் தளவாடங்கள் கொடுப்பதுபற்றி முடிவு செய்ததால்தான்" என்றும் பார்லிமெண்டு உறுப்பினர்கள் பேசிக்கொண்டார்களாம்—ஏடுகள் தெரிவிக்கின்றன. இவ்விதம் பேசிக்கொண்டவர்கள் யாராக இருக்கமுடியும்? நிச்சயமாக தோல்விக்குக் காரணம் கண்டுபிடிக்கும் எண்ணம் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்க முடியாது. எனவே, காங்கிரஸ் உறுப்பினர்கள் தான் இவ்விதம் பேசிக்கொண்டிருந்திருக்கமுடியும்! ஏன் இவ்விதம் பேசினார்கள்? அங்குதானிருக்கிறது சூட்சுமம்.

"ஏ, அமெரிக்காவே!—நீ, பாகிஸ்தானுக்கு ஆயுதத் தளவாடங்களை அனுப்பினால், என்ன ஏற்படும் தெரியுமா? கம்யூனிஸ்டுகளுக்கே செல்வாக்கு ஏற்படும். பார்! நாங்கள் ஜெயித்து, கம்யூனிஸ்டுகளின் இடுப்பை ஒடித்துக் காட்டுவதாக இருந்தோம். நீ, அதைக் கெடுத்துவிட்டாய். இப்படிச் செய்தால்,

உன் பக்கம், மக்களின் மனதை எப்படித் திருப்பமுடியும்?" இதுதான், அப்படிக் கூறியதில் அடங்கியிருக்கும் பொருளாகும். அதனால்தான், தோல்விக்குள்ள பழியைத் தூக்கி, அவர்கள் தலையில் சுமத்தும் ஆசை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆசை, இங்குள்ள 'கோயங்கா'க்களுக்கேற்படுவானேன்? அவர்கள், முதலாளித்துவ முதலைகளுடன் பேரம் பேசினார்கள்! அந்தப் பேரம் சரியாக நடைபெறவில்லை — அதே நேரத்தில், எதிர்பார்த்த பலனும் எங்கோ போகிறது — எனவே, தமது தோல்வியை மறைக்கவும், அவர்கள்மீது பழியைப் போடவும், இதனை ஒரு சாக்காக எடுத்துக் கொள்ளுகின்றனர். இதனால், இந்த 'காங்கிரஸ் தாங்கி'கள், வெளியுலகுக்குக் கூற விரும்புகிறார்கள்—'காங்கிரசே பெரிய ஸ்தாபனம். அதுவே, எங்கள் கட்சி. அதனால்தான் நாட்டை ஆளமுடியும். ஆள்வோர் யாவரும் எமது சிநேகிதர்கள்' என்கிற பெருமையை.

*

இன்று, திருவாங்கூரில் முக்காடிட்டுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ள பின்னும், இந்தப் பெருமையை நிலைநாட்டிக்கொள்ளத் தயங்கமாட்டார்கள், காங்கிரஸ் தாங்கிகள்.

காங்கிரஸ் ஒன்றுதான் ஆட்சியை நடத்தமுடியும்!—என்கிற விஷயத்தை ஸ்தாபிக்க என்னென்ன வழிகள் உண்டோ அதையெல்லாம் செய்வர்.

அதன் அறிகுறியும் காட்சி தருகிறது.

திருவாங்கூர் தேர்தலில், எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன. அவைகள் யாவும் சேர்ந்து, ஒரு ஐக்கிய அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியிலீடுபட்டிருப்பதாக, செய்திகள் வருகின்றன. இந்த முயற்சி வெற்றி பெற்றால், எதிர்க்கட்சிகளின் கூடாரத்தின் பலம் 72 ஆகவும் காங்கிரசின் பலம் 45 ஆகவும் இருக்கக் கூடும்.

தங்களைவிட, அதிக உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சியினர் வசம் ஆட்சியை ஒப்படைப்பார்களா? அல்லது, சென்னையில் செய்ததுபோல், காங்கிரசுக்கு அதிக வோட்டுகள் கிடைத்துள்ளன— ஆகவே, அதுவே அரசையேற்க வேண்டும் என்று முடிவுசெய்து, 'பலம்' சேர்க்க முயலுவார்களா?— என்பதை ஆலோசிக்கும்போது பற்பல ஐயங்கள் ஏற்படுகின்றன.

ஏனெனில் அதிக பலம் திரட்டுவது என்பது, திருவாங்கூர் காங்கிரசுக்கு, அவ்வளவு சுலபமான காரியமல்ல.

'திரட்டிவிடலாம்', எனும் தைரியத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலோ, எந்த நிமிஷத்திலும் அரசு, கவிழ்க்கப்படலாம்.

அப்படி நேர்ந்தால், ஜனாதிபதி ஆட்சியை நிலவ வழி ஏற்படும். அப்படி நிலவினாலும், எத்தனை நாளைக்கு, ஜனாதிபதி ஆட்சியை, அமுல் நடத்த முடியும்? மீண்டும் புதுத் தேர்தல்தான் நடத்த நேரும்! அப்படி நேர்ந்தால், ஏற்கனவே சலித்துப்போன மக்கள், காங்கிரசின் தலையில் சம்மட்டியடி கொடுக்கத் தவற மாட்டார்கள். விளைவு, படுகுழியாகும்.

மூன்று நான்காண்டு காலத்துக்கு தொடர்ந்தாற்போல் ஜனாதிபதியின் ஆட்சியை அமுல் நடத்த முடிவு செய்தால், அந்த 'அக்கிரமத்தை' எடுத்துச் சொல்லியே, எதிர்க் கட்சிகள் நல்ல பலம் பெற்றுவிடும்.

இப்படிப் பல பிரச்னைகள், இருக்கின்றன — காங்கிரசுக்கு. இதனாலேயே, எந்த முடிவும் செய்யவில்லை என்று திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர் ஒருவர், செப்பியுள்ளார்.

இதன்படி பார்த்தால், எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசு அமைக்கும் முயற்சி வெற்றிபெற்றாலும், ஆச்சரியமில்லை—அதற்கு வழி அமைத்துக்கொடுத்து, அந்த ஆட்சி சரியாக நடைபெற முடியாதபடி டில்லி சர்க்கார்மூலம் தொந்திரவு கொடுத்து, அந்த ஆட்சிக்கு மக்கள் மன்றத்தில் கெட்ட பெயரை உண்டாக்கி, தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள திட்டம்போட்டாலும் போடலாம், காங்கிரஸ்காரர்கள்.

'எவ்வழி செல்வர்?' — என்பது விளங்கவில்லை. எனினும், இந்தத் தேர்தல் காங்கிரஸ் கோட்டைக்கு சரியான பாடமாகும். வளர்ந்து வரும் எதிர்க்கட்சிகளின், வெற்றிக் காட்சியாகும்.

★

வைதீகம் பறந்தது!

காட்மண்டு,
மார்ச் 2.

இங்கு நடைபெறும் பசுபதி நாதர் சிவராத்திரி விழாவில் கலந்து கொள்ள துவாரகாபீடம் ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள், இன்று விமானமூலம். பாட்னாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்.

மகிழ்ச்சிச் செய்தி!

★ முரசொலி ★

வார இதழ்-விலை ½ அணா

ஆசிரியர்
மு. கருணாநிதி

ஏஜண்டுகள் முன்பணத்துடன் எழுதவும்

நிர்வாகி—'முரசொலி'
ஜக்ரியாகாலனி, கோடம்பாக்கம்.

'கெய்ரோ' நிகழ்ச்சி

விரட்டப்பட்டார்! — எனும் செய்தி காயவில்லை; அதற்குள் மீண்டும் அவரே அமர்த்தப்பட்டார் என்கிற செய்தி கிடைத்திருக்கிறது, உலகுக்கு.

உலகத் திரையில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஒருவரின் வாழ்க்கை அஸ்தமித்துவிடுமோ என்று அஞ்சக்கூடிய அளவுக்குப் பரபரப்பான செய்திகள் வந்துகொண்டிருந்தன.

சர்வாதிகாரியாக முயன்றார்! — உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினார்! — தன்னைத் தவிர வேறு யாருமில்லையென்று எண்ணுகிறார்! — சுட்டுக்கொன்றிருப்போம்; போனால் போகிறதென்று விட்டு வைத்திருக்கிறோம்! — இவ்விதமெல்லாம், எண்ணற்ற தகவல்கள் – திடுக்கிடக்கூடிய அளவில் — வந்துகொண்டிருந்தன.

சம்பவம் நடைபெற்றது, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள எகிப்து பூமியில் என்றாலும், இந்தச் செய்திகள், எல்லோரது சிந்தையையும் மிக மிகக் கவர்ந்தது.

அரசியல் அமளிகளை அடிக்கடி சிருஷ்டிக்கும் அரபு நாடுகளில், பதவியிலிருந்து ஒருவரை விரட்டுவதும், மற்றொருவரைச் சுட்டுக்கொல்வதும் மிகமிக சகஜமான சம்பவங்கள் என்றாலும், எகிப்தின் நிகழ்ச்சிகள், எல்லோரது இதயத்திலும் குழப்பத்தை உண்டுபண்ணியதற்குக்காரணம் ஒன்று உண்டு.

எகிப்து — புதிய பொன்னொளி! அங்கு சமீப ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்கள், சரித ஏட்டிலே, இடம் கொண்டுவிட்டன. மணிமுடிக் கொடுமைகளை உலகுக்கு விளக்கி, சிம்மாசனச் சீமானும் பரூக்கின் கொட்டங்களை முறியடித்து, அம்மன்னனைக் கப்பலிலேற்றி, 'சென்று வா!' என்ற சித்திரத்தை, அரசியல் அரங்கில், தீட்டிக் காட்டிய பூமி, எகிப்து. அங்கே, மன்னன் பரூக், நடத்திய கேளிக்கைகள், நவரசம் நிரம்பியது! நாடு, ஆங்கிலேயனின் பிடிப்பில் சிக்கிச் சீரழியும்போது அது எதைப்பற்றியும் கவலைப்படாது, ராஜபொக்கிஷத்துக்கு நவரத்னங்களைக் கொண்டுவந்து சேர்ப்பதிலும், அந்தப்புரத்துக்கு கொண்டுவரப்படும் அழகு ராணிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த அரசனை விரட்டியோட்டி, அல்லலுக்கு மத்தியில் கிடந்துழன்ற அரசைக் கைப்பற்றினர், மக்கள் தலைவர்கள்.

"மக்ரூஸா" — எனும் கப்பலில் ஏறி, மன்னன் பரூக், நேபிள்ஸ் மாநகரம் நோக்கிச் செல்லும் நாள் வரையிலும், எவருக்கும் தெரிந்திராத புதுப்பெயர் ஒன்று, உலக அரங்கில் உதயமாயிற்று—அதுதான், நகீப்! யார் — வரலாறு உண்டா— எப்படி இவ்வளவு பெரிய தலைவராக முடிந்தது — இவ்வண்ணமெல்லாம் கேட்டனர் உலக மக்கள். உலகத்திலுள்ள மக்கள் மட்டுமல்ல, எகிப்திலிருந்த பெரும்பாலோருக்கே, நகீப்பின் விபரங்கள் தெரியாது.

எனினும், காணமுடியாதப் புதுமையைக் கண்ட அந்நாட்டு மக்கள், புதுத் தலைவனைப் பூரிப்போடு உச்சரித்தனர்! வரலாறு கேட்கவில்லை; வாழ்க, என்று கூவினர். 'எப்படி, வந்தார்?'—என்று கேட்கவில்லை. 'ஒழிந்தானா, பரூக்—வந்ததா, புது வாழ்வு?' என்று உளம் மகிழ்ந்தனர்.

அந்தளவுக்கு, பரூக்கின் மீது, மக்களுக்கு வெறுப்பிருந்தது! மன்னன் ஒரு பக்கம் மதோன்மத்தனாயிருந்தான்—நாடோ, ஆங்கிலேயரின் வேட்டைக்காடாக இருந்தது. இந்த நெருக்கடியில் சிக்கிக் கிடந்த தேசத்தில், புது வாழ்வு மலரவும், அதற்குத் தலைவனாக அமரவுமான நிலைமையைப் பெற்ற நகீப்பின் மீது மக்களுக்கு அளவில்லாத பாசம் உண்டாயிற்று.

ஆட்சிப்பீடத்திலமர்ந்ததும், நகீப்பின் ஜோதி, ஜொலிக்கும்படியான பற்பல நடவடிக்கைகள் புறப்பட்டன.

வாழ்வில் வளமில்லாமல், ஆண்டானுக்கு அடிமையாகிக்கிடந்த ஏழைக் குடியானவர்களின் துயர் போக்கும் சட்டம் ஒன்று புறப்பட்டது! அதுதான், உழுபவனுக்கே நிலம்சொந்தமானதெனும், சட்டம். இதனைக் கனவில் கூடக் கருதியிருக்க முடியாது, அந்நாட்டு மக்கள்! அட்டகாசம் நிரம்பிய அரசனும், அவனுக்குப் பல்லவி பாடும் சீமான்களும் நிரம்பிய பூமியில், இப்படியொரு சட்டம் புறப்பட இயலுமா? இதைக்கண்ட மக்கள் மன்றம் பூரித்தது! ஏனெனில், எகிப்து நாட்டின் பெரும்பாலான மக்களின் தொழில், விவசாயம்தான். இந்த விவசாயி மக்கள், நிலப்பிரபுக்களின்பிடியில்சிக்கிச்சிதைந்த சம்பவங்கள் அமோகம். அதனால் தன்னுடைய கைகளில் கட்டப்பட்டிருந்த மாபெரும் விலங்குகளைத் தூள்தூளாக்கிவிட்டதாக, மகிழ்ந்தான், எகிப்து நாட்டு ஏழை மகன்!

இந்தச் சட்டத்தைச் செய்த அரசின் தலைவனும் நகீப்பை, நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாராட்டினர்—புகழ்ந்தனர்—போற்றினர். ஆனால், எதிரிகளோ, நகீபையும் அவரது ஆட்சியையும் தூற்றினர். 'நகீப்—ஒரு கம்யூனிஸ்டு!', என்றனர். இவ்விதம் மாளிகை வாசிகள் வீசிய குற்றச்சாட்டு, மக்கள் மன்றத்தின் போராதரவைத் தேடித் தந்தது, நகீபுக்கு.

மன்னன் வீற்றிருந்த இடத்தில் வீற்றிருக்கிறோம் — அவனுடைய அழகான மாளிகை எங்கே—பெரிய பொக்கிஷமாமே, அதைக் காட்டுங்கள், எனக்கு — என்று அவைகளை அனுபவிக்க முயலவில்லை, நகீப். சாதாரணமாக இந்த ஆசைதான் வரும்!

இங்கேதான் பார்க்கிறோமே — நம்முடைய மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள் — வெள்ளையன் வீற்றிருந்த ராஜமரியாதைகளை அடையப் போட்டி போடுவதை! இந்த அற்ப சுபாவம், நகீப்பின் தோழர்

களுக்கு ஏற்படவில்லை. நகீபும், அவருக்குத் துணைநிற்கும் புரட்சிக்குழுவும், தமக்குக் கிடைத்த அதிகாரத்தைப் போக போக்கியங்களைத் தேடித்தரும் 'அலாவுதீன் விளக்கு' என்று எண்ணவில்லை. அதற்கு மாறாக, மக்களின் வாழ்க்கையில் படிந்திருந்த சில மாசுகளைத் துடைத்து, புது ஒளியைக் காணும் உன்னத வாய்ப்பெனக் கருதினர். இதனால், மக்கள் மன்றத்தின்முன் நின்றனர்! மாளிகைகளைக் கண்டு மயங்கவில்லை!! 'இதுவா, பருக்கின், அரண்மனை?' என்று நுழைந்தனர். பருக்கின் அரண்மனை, என்ன சாதாரணமானதா! குளிப்பதற்கு வெள்ளித்தொட்டி—முகம் பார்க்கத் தங்கத்துக்குள் பதித்த கண்ணாடி—நவரத்தனமிழைத்த பெட்டியில் வைரங்கள்சூழ இருக்கும் சிகிரெட் பெட்டி — இதுபோல எண்ணற்ற ஆடம்பரங்கள், அங்கேயிருந்தன!! அந்தப் பொருள்களின் பட்டியலையெல்லாம், சேகரித்து, அதன் விபரத்தை உலகுக்கு அளித்தனர். 'ஏ! அப்பா!! இவ்வளவு ஆடம்பரத்தோடா, வாழ்ந்தார், அந்த பரூக்?' என்று எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அந்தப் பொருள்களையெல்லாம் வாங்கிச் சேகரிப்பதற்காக, பரூக் மன்னன், இலண்டன் மாநகரில் ஒரு கம்பெனியுடன் தொடர்பு கொண்டிருந்தானாம்! உலகிலெங்கப் பொருள் அழகாகவும் அருமையாகவும் இருக்கிறதென்றாலும். அதனை உடனே, அந்தக் கம்பெனி வாங்கி, எகிப்துக்கு அனுப்புமாம். அந்தக் கம்பெனியை, நகீப்பின் ஆட்சிக் குழு, அழைத்தது!

இவ்வளவு ஆடம்பரப் பொருள்களையும், நீதானே வாங்கித்தந்தாய்.

"ஆமாம்!"

"அதன்மூலம் எங்களின்செல்வம் எத்தனைநாடுகளுக்குப் போயிற்று!"

"உண்மைதான்!"

"இப்படி நிகழ்ந்தது, சரியா?"

"என்னைக் கேட்டால்? உங்கள் மன்னர் சொன்னார். வாங்கித்தந்தோம். நாங்கள், வியாபாரிகள் தானே!"

"உங்களைக் குற்றம் சொல்லவில்லை—பரூக்மீதுதான் தவறு. நீங்கள் வியாபாரிகள் தானே!"

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ.
தீட்டிய

பொன்னொளி

விலை அணா 4.

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால் தலைகள் அனுப்புக. 20 பிரதிகளுக்குமேல் பெறுவோருக்கு 25-சதவிகிதம் கழிவு உண்டு.

'பவழ பஸ்பம்' தயாராகிறது!

பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்

"இப்போது நீங்கள் சொன்னால், உங்களிடமிருக்கும் எல்லா ஆடம்பரப் பொருள்களையும், எங்கள் கம்பெனியே, விற்றுத்தரும்!"

"சரி, செய்யுங்கள்!"

இவ்விதம், அரண்மனையில் திரண்டு கிடந்த ஆடம்பரப் பொருள்களையெல்லாம், எந்தக் கம்பெனி வாங்கிக் கொடுத்ததோ, அதைவிட்டே, ஏலம்போடக் கட்டளையிட்டனர். இவ்வண்ணம் மக்கள் மன்றம் களிக்கும்படியான பல காரியங்களைச் செய்ததால், நகீப், நல்லதொரு இடத்தைப் பெற்றார். அதனால் தான், அவர் விரட்டப்பட்டார்—எனும் செய்தியைக் கேட்டதும், ஒரு பரபரப்பு உண்டாயிற்று. அப்படிவிரட்டப்பட்டவர், மீண்டும் அமர்த்தப்பட்டார் எனும் தகவல், அதைவிட ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்கிறது: ஏனெனில், அப்படி விரட்டப்பட்டவர்கள், உடனே அழைக்கப்பட்டு, அரசில் அமர்த்தப்படுவதென்பது, சாதாரணமாக நடக்கக்கூடிய காரியமல்ல. இதோ, காஷ்மீரத்திலே, அப்துல்லா—அடைபட்டுக்கிடக்கிறார். சிறையில்! பாரசீகச்சீமை முஸாதீக், கூண்டுக்குள், கிடக்கிறார்!! ஆனால், நகீப்மட்டும், போனார்—வந்தார். போகும்போது, தானே சர்வ அதிகாரமும் உள்ளவர் என்ற முறையில்போனார்! வரும்போதோ, தான் வெறும் ஜனாதிபதிமட்டுமே — அரசுக்காரியங்களைக் கவனிக்கும் முதலமைச்சு தன்னை விரட்டிய நாஸரிடமேயிருக்கும்—என்ற நிலையேற்பட்டிருக்கிறது. இந்த மாறுதல்களையெல்லாம் ரத்துசெய்து, தனக்கு முன்பிருந்த அதிகாரம் யாவும் இருக்கவேண்டுமென்று, அவரும் கேட்கவில்லை — அவரை அழைத்தோரும் கூறவில்லை. அதுமட்டுமல்ல, 'அவரைச் சுட்டிருப்பேன்!' என்று முழக்கிய நாஸரும், அவரும், அரசு மாளிகைக்குள் ஒருவரையொருவர் கட்டியணைத்துக்கொண்டனராம்! காணக்கூடிய காட்சியா, இது? தன்னை விரும்பாதசீசரை, புரூடஸ் கொன்றான்—புரூடஸை, அந்தணி கொன்றான்—அப்துல்லாவை, முகம்மது சிறையில் பூட்டினார்—இதுதான் சரிதம். ஆனால் அந்தச் சரிதம், எகிப்தில் நடைபெறவில்லை! வெறுத்தவரும், வெளியேறியவரும், "பாஸ்பரம்" ஒன்று கூடியிருக்கின்றனர்—மீண்டும். இதற்குக் காரணமென்ன?

> நகீப் விலகியதும் நாட்டில் கோந்தளிப்பு ஏற்பட்டதே, காரணம்.

என்று கூறுகின்றனர். உண்மைதான்! ஆனால், இதேபோன்றக் கொந்தளிப்பு, எந்த நாட்டில்தான் ஏற்படாமலிருந்தது? பாரசீகத்தில் கண்டோமே! அப்படியொரு கொந்தளிப்பு ஏற்பட்டதென்றாலும், அதை அடக்க சர்க்காரிடம், ராணுவமும் போலீசும் இல்லாமலில்லையே! கொந்தளிப்பை அடக்க

வேண்டுமென்று கருதியிருந்தால், நாஸர், செய்திருக்கலாம். ஆகவே, அது, ஒன்றல்ல, காரணம்.

கொந்தளிப்பு, நாட்டில் மட்டுமல்ல. சேனையிலும் உண்டாயிற்று. நகீப்பை, குதிரைப்படையினர், ஆதரித்தனர். நாசரைத் தரைப்படையினர், ஆதரித்தனர். குதிரைப்படை தான், அதிகம். ஆகவே, நாஸர், பயந்துவிட்டார்.

இது, ஒரு விளக்கம்—இதனைத்தான், எல்லா ஏடுகளும் பிரசுரிக்கின்றன. இந்த விளக்கப்படி பார்த்தால், நகீப் வசம் அதிகப்படைகளிருக்கின்றன— அவ்வளவு படைகளின் ஆதரவைப் பெற்றிருக்கும் நகீப், தன்னுடைய அதிகாரங்களை இழந்து மீண்டும், பதவியேற்கவா, சம்மதிப்பார்? அவரே, சம்மதித்தாலும், அவரைச் சுற்றியிருக்கும் தோழர்கள், விடுவார்களா! எரிகிற வீட்டில் கைப்பற்றிய வரையில் ஆதாயம் என்று, சிண்டுமூட்டிவிடத்தானே முயல்வர். அத்தகைய கோளாறுகள் எதுவுமின்றி, மிகமிக சாதாரணமான சம்பவம்போல் நடைபெற்றிருக்கின்றதே! 'என்னைவிட, நாடே முக்கியம்!' என்று நகீப், அறிக்கைவிட்டிருக்கிறார். 'நகீப் திரும்பிவிட்டார். நாசரே, முதலமைச்சராக இருப்பார்' என்று எகிப்தின் ஆட்சிக்குழு அறிக்கை விடுத்திருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளை வைத்து ஆராய்ந்தால் ஒரு உண்மை புலப்படும்.

நகீப்! — நாட்டுமக்களின் மனங்கவர்ந்த, தலைவர். மறுப்பாரில்லை.

நாஸர்!—செல்வாக்குள்ள, அரசியல்வாதி, மறுப்பாரில்லை.

ஆனால், இந்த இருவருக்குமிடையே ஏற்பட்ட 'சொந்தவிஷயங்கள்' அல்ல—தகராறுக்குக் காரணம். கொள்கைப் பிரச்னை.

இருசாராரும் கொள்கையின் அடிப்படையில் தகராறு செய்து கொண்டதால் தான், முடிவுகள், சுமுகமாக நடைபெற்றன.

இந்த முடிவுகளைப் பெற இரு சாராருக்கும் மத்தியிலும் வேலை செய்த எகிப்தின் ஆட்சிக்குழுவைப் பற்றி நினைக்கும் பொழுது, எகிப்தின் அரசியல், நகீப் ஒருவரை நம்பியோ அல்லது நாசர் ஒருவரை நம்பியோ இல்லை. அந்த இருவருக்குப்பின்னால் பலம் பொருந்திய அரசியல் குழுவொன்றுள்ளது. அந்தக் குழுதான், எங்கேயோ இருந்த நகீபை, திடீரென உலகக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது! அந்தக் குழுதான், பரூக் மன்னரின் கையிலே கிடந்த நாட்டை மீட்க, பற்பல திட்டங்களைத் தீட்டி பல்லாண்டு காலமாக முயற்சி செய்து வந்தது. அந்தக் குழுவில், பொழுதுபோக்கு அரசியல் வாதிகள் இல்லை. ராணுவத்தொடர்பு கொண்டோர்—அதிகாரிகளாகயிருந்தோர் — உலக விஷயமறிந்தோர், இவ்வண்ணம் பற்பலர் இருக்கின்றனர். இவர்கள் தான் இன்றைய எகிப்தின் முதுகெலும்புகள்! நீண்டகாலமாக தங்கள் நெஞ்சில் கிடந்த ஆசைகளை நிறைவேற்ற, இந்த மத்தியதர வர்க்கத்தினர் செய்த புரட்சியின் விளைவு தான், புது எகிப்து.

பணம் படைத்த சீமான்கள், நாகரீக வாழ்வில் லயித்துக்கிடந்தார்கள். ஏழைக்குடியானவர்களோ, கடன் சுமையும் வாழ்க்கைச் சுமையும் தாங்காமல் நகரம் நோக்கிச் சென்று, தொழிலாளிகளாகிக் கொண்டிருந்தார்கள். இந்த இரண்டுக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்ட மத்தியதர வர்க்க மக்களோ, வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்!

இவர்களிலே பலர், அதிகாரிகள் இவர்களுக்கு பரூக்கின் ஆட்சி என்னென்ன கொடுமைகளைச் செய்கிறது என்பது விபரமாகத் தெரிந்தது. ஏனெனில், அதிகாரிகளிலே பலருக்குப்போதிய சம்பளமில்லை. 'நேற்று வந்தோர்' எல்லாம் மன்னனுக்கு வேண்டியவர்களாயிருந்ததால் உயர் பதவிக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். இந்த அக்ரமங்களைக்கண்டு மனம் புழுங்கிய இவர்கள், 'எப்படியாவது இந்த ஆட்சி மாறவேண்டும்' எனக் கருதினர்.

இதேபோல கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்று, உலக விவகாரங்களை அறிந்த, மத்தியதர வர்க்க மக்கள் பலர், ஐயோ! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எந்த நிலையில் இருக்கிறானோ, அந்த நிலைமையிலேயே இன்றும் இருக்கிறானே! பக்கத்து நாடுகளிலெல்லாம் அன்னியனும் ஆங்கிலேயன் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டபொழுது, இங்குமட்டும் இன்னும் ஒழிக்கப்படவில்லையே?" என்று தாம் கண்ட புதுமைகளையெல்லாம் தன் நாட்டில் மலர்விக்கும் ஆசை கொண்டனர்.

கிராமத்து மக்களுக்கே, மன்னன் பரூக்மீது, ஆத்திரம். அதோடு, தனது மனைவி பரீடா என்பவரை, மணவிலக்கு செய்து, தன்னுடைய

விசித்திரமான ஆசை!

டி. கே. சி. அவர்கள், அண்மையில் காலமானது குறித்து, பற்பலர் தத்தமது அனுதாபங்களைத் தெரிவித்தனர். தமிழறிந்த புலவர்! ரசிகமணி! கம்பர் கண்ட நண்பர்! முத்தொள்ளாயிரம் வழங்கியவர்!—என்றெல்லாம். தமிழின்மாட்டு அளவிலா பற்றுக்கொண்டிருந்த அவரது மறைவு குறித்து, அவரவர்கள் தத்தமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டனர். ஆனால், சென்னையிலுள்ள ஒரு ஏடு—தேசியமும் வியாபாரமும் நோக்கமாகக் கொண்டது!—டி. கே. சி.யின் மறைவிலும், தன்னுடைய அற்ப ஆசையைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. ரசிகமணி கடைசியாக பெற்ற பாக்கியம், 'ஔவையார்' படம் பார்த்ததாம்!—இதைச் சொல்லிப் பெருமைப்படுகிறது. பெருமைப் பட்டுக்கொள்வதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், ஒரு தமிழ்நல்லார் மறைந்தபோதும், தன்னுடைய வியாபார நோக்கத்தையும், அதனை பக்திப் பெருக்கு எனும் போர்வையையுமா காட்டிக்கொள்ள முன்வர வேண்டும்? கைலாயம் கண்டாராம், அவர்!—இப்படியெல்லாம் எழுதிப் பேசி, பக்தி மார்க்கம் தழைக்க விரும்பும் இந்த 'ஆத்மா'க்களை என்னவென்று சொல்வது!

★

குழந்தைகளோடும் வாழக்கூடாது என்று தடை விதித்தது, கிராமத்தில் வாழும் சாதாரண மக்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

இராணுவ சிப்பந்திகளோ, அதிருப்தியின் உருவங்களாகக் கிடந்தனர்.

இந்நிலையில் சூயஸ்கால்வாய்பற்றிய பிரச்னையில் 1952ல் ஆண்டு கொண்டிருந்தவாபத் கட்சி தலையிட்டது. எகிப்தின் வீரர்கள் அனுப்பப்பட்டார்கள்! இதனை அடக்கப்பேருருவில், பிரிட்டனின் படைகள், வந்தன. இந்தப் படைகளுக்கு முன்னால், எகிப்தின் படைகளால், எதுவும் செய்ய முடியவில்லை. இதனால், பிரிட்டிஷார், கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டனர்.

இந்தக் கொடுங்கோன்மையைக் கண்ட எகிப்தின் அரசியல் கட்சிகள் யாவும் 'இங்கிலீஷ்காரன் ஒழிக' என்று கூச்சலிட்டன. ஒவ்வொரு அரசியல் கட்சியும், தத்தமக்குத் தாய்நாட்டின்மீதுள்ள பற்றைக் காட்டிக்கொள்ளும் அம்சமாக இந்த முழக்கத்தை வானளாவ எழுப்பினர்! அதன் விளைவாக, 1952 ஜனவரி 26ந்தேதி, கெய்ரோ நகரில் மாபெரும் கலவரம் முளைத்தது. வெள்ளையரின் கம்பெனிகள், பாங்கிகள், வீடுகள் யாவும் தாக்கப்பட்டன! தீ! படுகொலை! இவ்வண்ணம் சுதந்திரக் கிளர்ச்சி துவக்கப்பட்டது.

இவ்வண்ணம் திடீரென்று வெடித்த இக்கிளர்ச்சி எங்கு போய்விடுமோ என்றெண்ணிக் கொண்டிருந்தபோதுதான், ரத்தம் சிந்தாத புரட்சி நடைபெற்றது, ஜூலை 26-ம் தேதி. கெய்ரோவில் அமைக்கப்பட்டிருந்த 'அதிகாரிகள் சங்கம்' ஒன்றைக் கலைக்குமாறு, பரூக், உத்திரவிட்டார். அந்தச் சங்கத்தின், ஒரு தலைவர், என்றளவில்தான், நகிப்பைப்பற்றி, எல்லோரும் அறிவர்! அவரைத் தலைவராகக் கொண்ட மேற்படி சங்கத்தைக் கலைத்ததோடன்றி அவரையும் 700-மைலுக்கு அப்பால் போயிருக்கும்படி, மன்னர் கட்டளையிட்டார். அப்போதுதான், நகீபுக்கும் அவருடைய சகாக்களுக்கும், 'இந்த அரசு இனியும் நீடிக்கவேண்டுமா?' என்ற எண்ணம் எழுந்தது. அதன் விளைவாகத் தத்தமது அதிகாரத்துக் கீழிருந்த படைகளையெல்லாம் கெய்ரோ நோக்கித் திருப்பியவாறு, எல்லோரும், புறப்பட்டனர். ஜூலை 23-ந்தேதி, நகருக்குள் நுழைந்தனர். மூன்று நாளில், மன்னன் விரட்டப்பட்ட செய்தியும், தலைவராக நகீப், பதவியேற்ற தகவலும் உலகுக்குக் கிடைத்தது.

நீண்டகாலதிட்டம் — நாட்டின் மீதுள்ள பற்று, ஆகியவைகளின் காரணமாக, மத்தியதர வர்க்கப் பிரதிநிதிகள், செய்துமுடித்த புரட்சியிலே பூத்ததுதான், புதிய எகிப்து!

அதனால்தான், அங்கே மற்ற நாடுகளைப்போல், பிரச்னைகள் உருவாகவில்லை — 'பரூக்'கின் பாதையிலே, 'நகீப்'பையும் அனுப்பவில்லை.

அங்கே, திறமிக்க குழு இருக்கிறது—நகீபுக்குப் பின்னால். அதுதான், எகிப்தின் அரசைநிர்மாணிப்பது! அந்தக் குழுவினரின் நல்லெண்ணத்தால்தான், பலர் எதிர்பார்த்தது போல, 'நகீபின்' அரசியல் வாழ்வும், ஒரு நாடகமாக முடியவில்லை — பலமான அஸ்திவாரங்களுடன் கட்டப்பட்ட எந்த இயக்கத்துக்கும், இத்தகைய குழு இருந்தால், அந்த இயக்கத்தில் எவ்வளவு புயல் வீசினாலும், பூகம்பம் எழும்பினாலும், நாட்டுக்கோ மக்களின் நல்வாழ்வுக்கோ, தீங்கு நேராது. அதையே, சமீபத்திய எகிப்தின் நிகழ்ச்சிகள், விளக்குகின்றன.

★

முடியாத கதை

'கும்பமேளா'வில் நடைபெற்ற கோரங்களைப்பற்றி அகில உலகமே வியந்தது — 'இப்படிப்பட்ட மூட ஜனங்களா, இன்னுமிருக்கிறார்கள்!' என்பதாக.

சட்டசபை, பார்லிமெண்டு. எங்கும், சர்க்காரின் போக்குபற்றி கண்டனமாரி, குவிந்தது. ஏடுகள், யாவும் குமுறின. 'இப்படிப்பட்ட கொடூரங்கள் இனியும் நடைபெறாமல் தடுக்கவேண்டும்' என்று முற்போக்காளர் யாவரும் முரசு கொட்டினர்.

முற்போக்காளர், இந்தக் கொடுமையைக் கண்டிக்க முன்வருகின்றனர் என்பது தெரிந்ததும் வைதீகத் தூண்களாக விளங்கும் இந்நாட்டு, ஏடுகள், கோபக்கணைகளை வீசின. 'ஏதோ அசம்பாவிதத்தால் நடந்துபோன அந்தக் காரியத்துக்காக, இவர்கள் வந்துவிட்டார்களய்யா நீலிக்கண்ணீர் வடிக்க!' என்றெல்லாம், எழுதின.

அந்த ஏடுகளின் பார்வைக்கு இந்த வாரம் கிடைத்துள்ள, புதுச் செய்தியை வைக்கிறோம்.

நூறு உயிர்கள் பலியாகியிருக்கின்றன! சிவராத்திரி ,பரிசு' இது. ஆக்ராவுக்கருகிலுள்ள, பட்டாஷ்வர் எனுமிடத்தில், யமுனையைத் தாண்டி அக்கரையிலுள்ள, சிவன் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தனராம். அப்போதேற்பட்ட நெருக்கடியின் விளைவால்; படகு கவிழ்ந்து, தண்ணீருக்குள் மூழ்கிவிட்டனர்.

நூறு உயிர்கள்!—கேட்கும்போதே, பயங்கரமாயிருக்கிறது. இது போல்பற்பல, கோரங்களை வளர்க்கும் பக்தியா, தேவை? ஆண்டவனைக்கும்பிட, அவர்கள், இருதயம் போதாதா! அல்லது, வீடு, போதாதா!! கடவுளை, 'பப்ளிக் நியூசன்ஸ்' ஆக்கும் இந்தப் பக்தகோடிகள் இருக்கும்வரை, இதுபோன்ற கோரக்கதைகள், முடியாது — ஓயாது.

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.